# இலக்கணக் கொள்கைக் கட்டுரைகளிலே கணேசையரின் அணுகுமுறை

ஆ. வேலுப்பிள்ளை

இருபதாம் நூற்றுண்டு முற்பாதியிலே, இலங்கை யாழ்ப்பாணத்திலிருந்து, ஆறுமுகநாவலர் மரபிலே, தமிழ்க் கல்விமான்களாகப் பிரகாசித்த புலவருள், சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரும், மகாவித்துவான் கணேசையரும் அடியிணையற்றவர்கள். ஆறுமுகநாவலரின் மருகரான வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளையின் மாணவராக இருந்த கணேசையர் (1878 — 1958) பொன்னம்பலபிள்ளையின் மறைவின் பின் சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரின் மாணவராஞர். உரையாசிரியர் மட்டுவில் க. வேற்பிள்ளை, காசிவாசி செந்திநாதையர் முதலியோரும் இவர் ஆசிரியராக விளங்கியவர்கள். இராகவையங்கார் என்ற பெயர் தாங்கிய அறிஞர்கள் இருவரும் வேண்டிக்கொண்டபடி, 'செந்தமிழ்' என்னும் மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீட்டுக்கு, கணேசையர் நீண்டகாலமாக ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிவந்தார்.

கணேசையரின் அறிவுவளர்ச்சியில், அவருக்குச் சுன்னுகம் பிராசீன பாடசாலையிலே, தலைமைத் தமிழாசிரியராகக் கிடைத்த பதவிக்காலம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தை ஒத்ததாக இலங்கையிலும் ஓர் அமைப்பு வேண்டுமென்ற அபிலாசை 1921ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 'ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்' என்ற அமைப்பு வித்தியாதரிசி யா. தி. சதாசிவ ஐயர் முயற்சியில் உருவாகக் காலாயிற்று. அச்சங்கம் நடத்திய பண்டித, பாலபண்டித, பிரவேசபண்டிதத் தேர்வுகளுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்காகப் பிராசீன பாடசாலையொன்று அதே ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப் பாடசாலையிலே கணேசையர் தலைமைத் தமிழாசிரியராகக் கடமையாற்றிய காலம் எட்டாண்டுகளா, பதினேராண்டுகளா என்பதிலே கருத்துவேறுபாடு காணப்படுகிறது. கணேசையர் பதவி விலகிய பின்பும் தனிப்பட்ட முறையிலே, திண்ணைப் பள்ளிக்கூட அமைப்பிலே மாணவர்களுக்குத் தொடர்ந்து பாடஞ்சொல்லி வந்தாராதலின், அவர் கல்வி வளர்ச்சி தடைப்படவில்லை. பிராசீன பாடசாலையிலே, பாலக்காட்டிலிருந்து வந்த வேதவிசாரதர் சிதம்பரசாஸ்திரியுங் கடமையாற்றியதால், கணேசையர் சங்கதமொழி அறிவையும் விருத்திசெய்துகொண்டார்.

கணேசையரின் தமிழ்ப்பணிகள் பரந்துபட்டன. புலவர், வாழ்க்கை வரலாற்றுசிரியர், இலக்கிய உரையாசிரியர், இலக்கண ஆராய்ச்சியாளர் என்று பலவாறு வருணிக்கப்படத்தக்க முறையிலே. அவர் பணிகள் அமைந்தன. இலக்கண ஆராய்ச்சியாளர் என்ற முறையிலேயே, அவர் பெருஞ்சிறப்புப் பெறுகிருரெனலாம். பிராசீன பாடசாலையிற் கற்பித்துவந்த காலத்திலே அவர் தாம் முன்னர் கற்றனவற்றைப் பீடிகையாகக்கொண்டு, விசேடமாக இலக்கணத் துறையில் ஆர்வத்துடன் ஆராய்ச்சி செய்துவந்

தார். தொல்காப்பியம், நன்னூல் என்பனவற்றுக்குப் பல்வேறு ஆசிரியர்கள் கண்ட உரைகளையெல்லாம் நன்கு ஒப்புநோக்கி ஆராய்ந்ததன் பயனாக, எத்தனையோ புதிய விளக்கங்கள், திருத்தங்கள் என்பனவற்றைக் கண்டு கொள்ளக்கூடியவராயினர். அவர் பிராசீன பாடசாலையிற் கடமையாற்றிய காலத்திலும் அக்காலத்திற்கு வெகு அண்மையிலுமே, அவருடைய இலக்கண ஆராய்ச்சி முடிபுகள் கட்டுரை உருவத்திலே வெளிவந்தன.

கணேசையர் இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகளிலே காட்டிய திறமை, தொல்காப்பியம் முழுவதையும் தம்முடைய உரைவிளக்கக் குறிப்புகளோடு வெளியிடும் சந்தர்ப்பத்தை, அவருக்குப் பெற்றுக்கொடுத்தது. ஈழகேசரிப் பத்திராதிபர் பொன்னையாவின் வேண்டுகோட்படி, தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியம் தாமோதரம்பிள்ளை பதிப்பு, கணேசையரின் உரைவிளக்கக் குறிப்புகளோடு கணேசையர் பதிப்பாக 1937 இல் வெளிவந்தது. கணேசையர் பதிப்பு என்ற பெயருடன் வெளியான எழுத்ததிகாரத்துக்கு இருந்த வரவேற்பு அடுத்த ஆண்டிலேயே தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையத்தைக் கணேசையர் தம்முடைய உரைவிளக்கக் குறிப்புகளோடு வெளியிட வழிவகுத்தது. இவ்விரு பதிப்புகளும் வெளிவரமுன்பு கணேசையரின் இலக்கண நுண்ணறிவு, அவர் கட்டுரைகள் வெளியான சஞ்சிகைகளை வாசித்த தமிழ் அறிஞர்களுக்கிடையே மட்டும் பிரபலமெய்தியிருந்தது. இப்பதிப்புகள் வெளியான பின்னர், தமிழ்நாட்டறிஞர் ஐயரின் அறிவின் பெருமையையும், ஆற்றலையும் உள்ளவாறுணர்ந்து மகிழ்கலாயினர். ஈழகேசரிப் பத்திராதிபர் பொன்னையாவின் தூண்டுதலில், அண்மையில் மறைந்த முதுபெரும் தமிழறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் உதவியுடன் பொருளதிகாரத்துக்கு உரைவிளக்கக் குறிப்புகள் எழுதத் தொடங்கிய கணேசையர் பொருளதிகாரம் பேராசிரியம் கடைசி நான்கு இயல்களை 1943இலும், நச்சினார்க்கினியம் முதல் ஐந்து இயல்களை 1948 இலும் வெளியிட்டனர். சென்னை 'இந்துப்' பத்திரிகையில் ஐயரின் தொல்காப்பியப் பிரசுரங்களை விமர்சனஞ்செய்த சுப்பிரமணிய சாஸ்திரி எழுதிய கட்டுரைகள் ஐயரின் ஆழ்ந்த அறிவு, ஆராய்ச்சித் திறமை நுண்ணிய விளக்கம் என்பனவற்றிற்கு மிக்க சான்று பகருந் தன்மையின.

தொல்காப்பியம் முழுவதற்குமான கணேசையரின் உரைவிளக்கக் குறிப்புகளை ஒரு சிறுகட்டுரையிலே ஆய்வுபூர்வமான மதிப்பீடுசெய்ய இயலாது. கணேசையரின் இலக்கணக் கட்டுரைகளிலே தெரிந்தெடுத்த சிலவற்றை அவரின் உரைவிளக்கக் குறிப்புகளோடு வெளிவந்த தொல்காப்பியப் பதிப்புகளிலே அனுபந்தங்களாகச் சேர்த்துள்ளனர். எழுத்ததிகாரப் பதிப்பின் இறுதியிலே 'போலி எழுத்து', 'அளபெடை' என்னும் இரு கட்டுரைகளையும் சொல்லதிகாரப் பதிப்பின் இறுதியிலே 'தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி', 'பிறிதுபிறிதேற்றல்', 'ஆறனுருபு பிறிதேற்றல்', 'இருபெயரொட்டாகுபெயரும் அன்மொழித்தொகையும்', 'தொகைநிலை' என்னும் ஐந்து கட்டுரைகளையும், பொருளதிகாரம் நச்சினார்க்கினியப் பதிப்பின் இறுதியிலே 'சிறு பொழுதாராய்ச்சி' என்னும் ஒரு கட்டுரையையும் தொகுத்துள்ளனர். இக்கட்டுரைகள் யாவும் 'செந்தமிழ்' என்ற சஞ்சிகையிலே வெளியாகியவை: கணேசையருடைய மாணவராஜ

பண்டித வித்துவான் க. கி. நடராஜன், இக்கட்டுரைகளைப்பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார் :-

> ''இவ்வாராய்ச்சிகளிற் சிவஞான முனிவரின் இலக்கணக் கொள்கைகளை மறுத்து வேறு கொள்கைகளை இவர்கள் நிறுவியிருக்கிறார்கள். இதனை இவர்கள் தமது கூர்த்த மதிகொண்டு செய்தமை இவர்தம் நுண்ணறிவைக் காட்டும்.''

## சிவஞான முனிவரும் அவர் அணுகுமுறையும்

சிவஞான முனிவருடைய திறமையையும் பெருமையையும் அறிந்து கொண்டால்மட்டுமே, அந்தப் பின்னணியிலே கணேசையரின் பணியை மதிப்பீடு செய்யலாம். பதினெட்டாம் நூற்றாண்டு பிற்பாதியிலே, சிவஞான முனிவர் வடநூற்கடலும் தென்னூற்கடலும் நிலைகண்டுணர்ந்து இலக்கியம், இலக்கணம், தத்துவம், தர்க்கம் முதலிய துறைகளிலே ஒப்பாரும் மிக்காருமில்லாமல் விளங்கிச் செய்யுள் நூல்களும் உரைநடை நூல்களும் பலவாக இயற்றியவர். சிவஞான முனிவரின் இலக்கண ஆராய்ச்சித் திறன்பற்றிப் பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை (சுவாமி விபுலானந்தர், சோமசுந்தர பாரதியார் ஆகியோரைத் தொடர்ந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவர்) 'சிவஞான முனிவர் வரலாறும் நூலாராய்ச்சியும்' என்ற நூலிலே கூறியுள்ள மேல்வரும் பகுதிகள் நோக்கத்தக்கன :-

> ''வடமொழியிலே மாபாடியம் என்ற பெயர் ஆசிரியர் பதஞ்சலியார் பாணினியின் இலக்கண நூற்கியற்றிய பேருரைக்கே அமைந்துள்ளது. ஆசிரியர் சிவஞான சுவாமிகள் தமிழ்ப் பேரிலக்கணமாய தொல்காப்பியப் பாயிரத்துக்கும் முதற் சூத்திரத்திற்கும் பாடியம் உரைத்தனர். பிற சூத்திரங்களுக்கு அவர் உரைகாண்டற்குரிய தவம் தமிழ்நாட்டினர்க்கு வாய்த்திலது.''

> ''மொழித்திறத்தின் முட்டறுத்தற் பொருட்டுத் தொல்காப்பியமாகிய இலக்கண நூலிற்கு விருத்தியுரை எழுதுவான் புகுந்து பாயிரத்திற்கும் முதற் சூத்திரத்திற்குமே அகலம் எழுதி முடித்தனர். பிறவற்றிற்கு எழுதுவதன்முன் முதல்நூலாகிய சிவஞானபோதப் பொருள் விரிப்பக் கருதி, அதனையே முற்றிலும் எழுதி முடித்துப் பெரும்பயன் விளைத்தனர். வீட்டு நூலாகிய இதன்கண் கருத்தூன்றப்பெற்ற பின் கருவி நூலின்கண் அது செல்லாமையின், தொல்காப்பியத்துக்கு முழுப்பேருரை எழுதும் பேறு யாம் பெற்றிலம்.''

சிவஞான முனிவரைப்பற்றி மேலும் சில பேராசிரியர்கள் கூறியுள்ளவற்றைப் பார்க்கலாம். 'தமிழ் உரைநடை வரலாறு' என்னும் நூலிலே பேராசிரியர் வி. செல்வநாயகம் கூறியுள்ளமை வருமாறு :-

> ''உரையாசிரியர்களுட் சேனாவரையர் கையாண்ட தர்க்க முறையாக அமையும் உரைநடையைப் பின்பற்றிக் கம்பீரமாகச் செல்லும் ஒரு

உயர்ந்த நடைவகையினைக் கையாண்டு சிவஞானபோதமாபாடியம், இலக்கணவிளக்கச் சூருவளி, தொல்காப்பியச் சூத்திர விருத்தி முதலிய சிறந்த உரைநடை நூல்களை இயற்றினர்."

"பிறரைக் கண்டிப்பதற்குத் தமிழுரைநடை ஒரு சிறந்த கருவியாக அக்காலத்தில் விளங்கிற்று என்பதற்கு அவ்விலக்கண விளக்கச் சூருவளி ஒர் எடுத்துக்காட்டாகும். அச்சூருவளியிற் பறவாத உரையாசிரியர்கள் மிகச் சிலர் என்றே கூறலாம். இக்கண்டன நூலிலும் பிற கண்டன நூல்களிலும் அவர் கையாண்ட உரைநடை பழைய உரையாசிரியர்கள் கையாண்ட செந்தமிழ் நடையாக இருந்தபோதும், பிறரைத் தாக்கிக் கூறும் வகையிலே ஓர் உணர்ச்சிக் கலப்புள்ள நடையாகவும் ஒரு புதுச் சோபையுள்ள நடையாகவும் விளங்குகிறது."

பேராசிரியர் மு. வரதராசன் தம்முடைய 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலிலே கூறியிருப்பதாவது :-

"வடமொழியிலும் தருக்கத்திலும் இலக்கணத்திலும் அவர் பெற்றிருந்த புலமையை அவருடைய உரைநூல்கள் காட்டும்... . புலவர்கள் அஞ்சத்தக்க வகையில் மறுப்பு நூல்கள் எழுதியவர் அவர்."

பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியன் தம்முடைய 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலிலே, "சோழவந்தான் அரசஞ்சண்முகனுர், திருமயிலை சண்முகம்பிள்ளை, சோமசுந்தரம்பிள்ளை, மறைமலையடிகள், சுன்னுகம் குமாரசாமிப்பிள்ளை ஆகியோர் பல இலக்கணக் கட்டுரைகள் வரைந்துள்ளனர்" என்று கூறும்போது, கணேசையரைக் குறிப்பிடவில்லையென்பதைக் கவனிக்கலாம். சிவஞான முனிவர் பாரதூரமான கண்டனத்துக்கு ஆளாகிய மையை எடுத்துக்காட்டவும் விரும்பாமையே, கணேசையர் விடுபட்டதற்குக் காரணமாக இருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம்.

சிவஞான முனிவரின் இலக்கணப் பங்களிப்புகளாக, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூருவளி, நன்னூல் விருத்தியுரை என்பனவற்றைக் கூறலாம். நன்னூல் விருத்தியுரையிலே பிற உரையாசிரியர் பற்றிய கண்டனம் குறைவு. சங்கரநமச்சிவாயர் எழுதிய விருத்தியுரையைத் திருத்தியும் புதுக்கியும் ஆக்கப்பட்டது அது. இலக்கணவிளக்கச் சூருவளி வைத்தியநாத நாவலர் இயற்றிய இலக்கண விளக்கத்தைக் கண்டனஞ்செய்து ஒதுக்குவது நோக்கமாக இயற்றப்பட்டது. அந்த நூல் ஐந்திலக்கணமாயபோதும், முனிவர் மறுப்பு எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே காணப்படுகிறது. இலக்கண விளக்கச் சூருவளியிலே, சிவஞான முனிவர் கண்ட குறைகள் சிலவற்றுக்கான விளக்கங்களுக்குத் தம்முடைய தொல்காப்பியச் சூத்திர விருத்தியைப் பார்க்கும்படி, முனிவரே கூறியுள்ளார். 'புலவர்கள் அஞ்சத்தக்க வகையிலான' மறுப்புகள் அந்த நூலிலேயே காணப்படுகின்றன.

தொல்காப்பியச் சூத்திர விருத்தியிலே உரையாசிரியர் பிறர் எவ்வெவ்வாறு கண்டிக்கப்பட்டுள்ளனர் என்பதற்கு மாதிரிக்குச் சில :-

'இஃதறியாதார் ..... இடர்ப்படுப.'

'இக்கருத்தறியாத நச்சினார்க்கினியர்.'

'நச்சினார்க்கினியர் ...... இடர்ப்படுத்தி நலிந்து பொருள்கொண்டு ...... தமக்கு வேண்டியவாறே கூறினார்.'

'இக்கருத்தறியாத உரையாசிரியரை யுள்ளிட்டோ ரெல்லாரும்.'

'இனி உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் ......... ஆகுபெயர்பற்றி யறிந்திலர்போலு மென்க.'

'இப்பெற்றியறியாத உரையாசிரியர் முதலியோர்.'

'இனி உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் ... உரைத்தாராலெனின், ... ...அவருரை போலியுரை யெனவறிக.'

'தமிழ்நூலொன்றே வல்லவுரையாசிரியரை யுள்ளிட்டோருரையை, ஆசிரியர் கருத்தாகக்கொண்டு பின்னுள்ளோரு மயங்குவாராயினா ரென்பது.'

'அங்ஙன முரைப்பனவெல்லாம் போலியென்றொழிக.'

'இங்ஙனங் கூறிய வாசிரியர் கருத்து நோக்காது, யாம் பிடித்ததே சாதிப்போ மென்னுங் கருத்தாற் ...... தாங்கண்டமாட் டெறிந்ததற் கேற்பவே பொருளுரைத்தார் மாட்டேற்று முறைமையுணராத உரை யாசிரியரை உள்ளிட்டோரெனவுணர்க.'

'இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப.'

'இதனானே உரையாசிரியர் நச்சினார்க்கினிய ருரைகளு மறுக்கப்பட்டன.'

'இங்ஙனஞ் செம்பொருள் கொள்ளமாட்டாதார் ...... கூறியது கூற லென்னுங் குற்றப்பட விடர்பட்டுப் பொருளுரைத்தார். இவ்வாறே யாண்டு முரைசெய்த லவரியல் பென்க.'

'பிறிது பிறிதேற்றலும்' என்பதற் குரையாசிரியரை யுள்ளிட்டோ ருரைத்தவை போலியுரை என்பது மேற்கூறினேம்.'

சிவஞான முனிவர் வடமொழி இலக்கணப் புலமையை எடுத்துக்காட்டிப் புலவர்களை அஞ்சுவித்தமைக்கும் சூத்திர விருத்தியிலிருந்தே உதாரணங்கள் வருமாறு :–

'இங்ஙனம் வருவனவற்றை வடநூலார் அத்தர்ப்பாவிதணிச் சென்பர்.'

'இக்கருத்தேபற்றி வடநூலாரும் யாப்பு முதலிய நான்கும் உணர்த்துவதே பாயிரமெனக் கொள்ப.'

'வடநூலார் யாப்பை ஆனந்தரியமென்றும், நுதலிய பொருளை விடயமென்றும், கேட்போரை அதிகாரிகளென்றும், பயனைப் பிரயோசனமென்றுங் கூறுப.'

'இப்பாயிரத்தை வடநூலார் உபோற்காத மென்ப.'

'வழிமொழிதற்கு முன்னர்ப் பெறப்பட்டதனைப் புரோவாதமென்பர் வடநூலார்.'

'இன்னுமிக் கடாவிடைகளெல்லாம் மாபாடியத்துங் கையடத்தும் இரண்டாமானிகத்திற் கண்டுகொள்க. கையடனார் நரமடங்கல் போலென் றுவமையுங் கூறினார்.'

'வடநூ லுணர்ந்தார்க்கன்றித் தமிழியல்பு விளங்காதென்பது முணர்ந்து கோடற்கன்றே பாயிரத்துள் ''ஐந்திரம் நிறைந்த தொல் காப்பியன்'' என்றதூஉமென்க.'

'வடநூலாரும் இலகுச்சாரண மென்பர்.'

'இதனை வடநூலார் ஆற்பனே பதமென்ப.'

'வடநூலார் தன்னைப் பற்றுதலென்னுங் குற்றத்தை இதரேதராச்சிரய மென்றுங் கூறுப.'

'வடமொழி மதம்பற்றிக் கூறினர்.'

சிவஞான முனிவருடைய மதிப்பிற்குப் பாத்திரரான உரையாளர் சேனாவரையர் ஒருவரே. சூத்திரவிருத்தியிலே, இரண்டிடங்களில் அமைந்துள்ள முனிவர் கூற்றுகள் இவ்வுண்மையைத் தெளிவாக்குகின்றன:–

'வடநூற் கடலை நிலைகண்டறிந்த சேனாவரையர் எழுத்ததிகாரத்திற் குரைசெய்தாராயின், இன்னோரன்ன பொருளனைத்துந் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்துரைப்பர்.'

'அது வடநூல் விதியோடு முரணுதலானும், வடநூலோடு மாறு கொள்ளாமற் கூறலே ஆசிரியர் மேற்கோளென ''அதனினியறல்'' என்னுஞ் சூத்திரத்துத் தாமுங் (= சேனாவரையருங்) கூறினராக லானும், அவர்க்கது (= சேனாவரையர்க்கது) கருத்தன்றென்க.

'இன்னுமோரோரிடங்களிலே யிவ்வாறே (= சேனாவரையர்) மயங்கிக் கூறுவர். அங்ஙனமோரோவழி மயங்குதல்பற்றி அவரையிகழற்க, நச்சினார்க்கினியர் முதலியோர்போல யாம் பிடித்ததே சாதிப்போ மென்னுஞ் செருக்கால் யாண்டு மயங்காமையின். முக்குணங்களு மாறிமாறி வருதலின், அதுபற்றி யெனைத்துணை நுண்ணறிவாளரு மோரோவழி மயங்குத லியல்பென்க.'

இவ்வாறு ஒரோவழி மயங்குபவர்களிலிருந்து அகத்தியர், தொல்காப்பியர், பதஞ்சலி முதலியவர்கள் 'தவத்தால் மனந்தூயராய், முக்குணங்களையுங் கடந்து இறைவனருள் பெற்றுடையராகலின்' சிவஞான முனிவரால் விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளார்கள். இத்தகைய விலக்குப் பெற்றவர்களுள்ளே தமக்கும் ஒரிடம் கிடைக்கவேண்டுமென்று முனிவர் விரும்பியிருக்கலாமென்று ஊகிக்க இடமிருக்கிறது. அது எவ்வாறாயினும், கணேசையருக்குச் சேனாவரையர்மேல் சிவஞான முனிவருக்கிருந்ததிலும் கூடிய மதிப்பு இருந்திருக்கிறது. சிவஞான முனிவர் சேனாவரையரிலிருந்து வேறுபடுமிடங்கள் பலவற்றிலே, சேனாவரையருரையே பொருத்தமானதெனக் கணேசையர் நிறுவ முயன்றுள்ளார்.

தொல்காப்பியப் பதிப்புகளிலே அனுபந்தங்களாக வெளியிடப்பட்ட கணேசையரின் எட்டுக் கட்டுரைகளுக்கும் அவை முதலில் வெளியான 'செந்தமிழ்' என்ற சஞ்சிகையின் தொகுதி, பகுதி என்ற விபரங்கள் காணப்படுவதால், அக்கட்டுரைகளைக் காலமுறையிலே மேல்வருமாறு வகுக்கக்கூடியதாயுள்ளது.

1. போலி எழுத்து (22 – 3)
2. ஆறனுருபு பிறிதேற்றல் (25 – 9)
3. தொகைநிலை (26 – 1)
4. அளபெடை (26 – 7)
5. பிறிதுபிறிதேற்றல் (27 – 1)
6. தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி (27 – 7,9)
7. இருபெயரொட்டாகுபெயரும் அன்மொழித் தொகையும் (28 – 12)
8. சிறுபொழுதாராய்ச்சி (29 – 10)

இக்கட்டுரைகள் யாவும் 1923ஆம் ஆண்டுக்கும் 1931ஆம் ஆண்டுக்குமிடையில் வெளிவந்தவை. இக்கட்டுரைகளிலே கணேசையரின் அணுகுமுறையின் போக்கினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கணேசையரின் அணுகுமுறை

முதலிலே வெளியான நான்கு கட்டுரைகளிலும் ஒரு பொதுத் தன்மையைக் காணலாம். கட்டுரைகளைத் தொடங்கும்போது, கணேசையர் நேரடியாகத் தொல்காப்பிய ஆராய்ச்சியாகத் தொடங்கவில்லை. தொல்காப்பியக் கடலுள் இறங்க, அவருக்குத் தயக்கமாக இருந்திருக்கவேண்டும். போலி, ஆறனுருபு பிறிதேற்றல், அளபெடை என்ற மூன்றும் நன்னூலார் கருத்துகளை ஆராய்வதற்காக எழுந்த கட்டுரைகள்போல அமைந்துள்ளன, அகத்தியம் முதனூலெனவும், தொல்காப்பியம் வழிநூலெனவும், நன்னூல் புடைநூலெனவும் முனிவர் கொண்டுள்ளார். ஐயர் நன்னூலை வழிநூலெனக் கொள்வதால், தொல்காப்பியத்தை முதனூலெனக் கொண்டிருக்கவேண்டும். நன்னூல் எழுந்த காலத்திலிருந்தே அது வழிநூலா அல்லது தொல்காப்பியத்துக்கு எதிர்நூலா என்ற வினு எழுந்திருக்கிறது. இளம்பூரணர் உரையோடு கூடிய தொல்காப்பியத்தையும் இராசபவித்திரப் பல்லவதரையரின் உரையோடு கூடிய அவிநயத்தையும் நன்கு பயன்படுத்தியே, பவணந்தி நன்னூலை எழுதியுள்ளார்.

தொல்காப்பியம் ஓர் ஆசிரியரால் ஒரு காலத்திலே செய்யப்பட்ட நூல்தானு என்பது இன்று பிரச்சினையாகியுள்ளது. இந்த நிலை ஏற்பட்டதற்கு இரண்டு காரணிகளுள. தொல்காப்பியர் காலம் இன்று காணப்படும் சங்க நூல்களின் காலத்துக்கு முற்பட்டதென்று நம்பப்படும் வலுவான மரபு உண்டு. அது இடைச்சங்க நூலென இறையனாரகப்பொருளுரை கூறியுள்ளமையை மறுத்து, அது கி. பி. நான்காம் நூற்றுண்டு வரையிலேயே தோன்றியிருக்க வேண்டுமென்ற முடிபுக்கு ஆதரவாகப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அகச்சான்றுகள் பல காட்டியுள்ளார். தொல்காப்பியருக்கு முற்பட்டவரெனக் கூறப்படும் அகத்தியரைப்பற்றித் தொல்காப்பியத்திலோ, சங்க இலக்கியங்களிலோ எவ்வித குறிப்புமில்லை. அகத்தியர் மாணவர் பன்னிருவருள்ளே தொல்காப்பியர், அவிநயர், பனம்பாரனர் முதலியோர் அடங்குவரெனவும், அவரே பன்னிரு படலத்தைப் பாடினரெனவும் அப்பன்னிரு படலத்தின் வழிநூலாகவே புறப்பொருள்

வெண்பாமாலை தோன்றியதெனவும் புறப்பொருள் வெண்பாமாலையிலே கூறப்பட்டு, இடைக்காலத்திலிருந்து வலுவுடன் காணப்படும் மரபு ஒன்று உண்டு. தொல்காப்பியர் என்ற பெயரிலே இருவர் இருந்தனர். ஒருவர் சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டவர், மற்றவர் அகத்தியரின் மாணவராகச் சுமார் கி. பி. ஆறும் நூற்றாண்டுவரையில் வாழ்ந்தவர். இளம்பூரணர் தொல்காப்பியத்துக்கு உரையெழுதுவதற்கு முன்பு தொல்காப்பியர் இருவர் கதைகளும் கலந்து, தொல்காப்பியம் இரண்டன் மரபுகளும் கலந்துவிட்டனவெனப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் முடிவு கட்டியுள்ளார்.

பவணந்தி அவிநயத்தைப் பயன்படுத்தியுள்ளபோதும், நன்னூல் தொல்காப்பியத்தின் 'அழிநூல்' அல்ல, வழிநூலே என்ற மயிலைநாதரின் முடிபைக் கணேசையர் ஏற்றுள்ளார். இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் நன்னூலைத் தூற்றியும் போற்றியும் கண்டனங்களும் கண்டன மறுப்புகளும் 'செந்தமிழ்' என்ற சஞ்சிகையிலே வெளிவந்தமை கவனிக்கத்தக்கது. இலங்கை இராமநாதன், 'தொல்காப்பியரும் பிற்காலத்தாரும்' என்னும் தலைப்பிலே தொல்காப்பியரைப் புகழ்ந்தும், பவணந்தியாரை இகழ்ந்தும் தொடர் கட்டுரை எழுதிவந்தனர். இதற்கு மறுப்பாக, யாழ்ப்பாணத்து க. வைத்தியலிங்கம்பிள்ளை கட்டுரை எழுதினர். இம்மறுப்புக்கும் மறுப்பு, யாழ்ப்பாணம் ஆர். ஆர். குணரத்தினம் என்பவரால், 'நன்னூல் என்னும் இளையபில் பெயர்ச்சொற்றொடர் மறுப்பு' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. கணேசையர் நன்னூலை மதித்தவரென்பது தெளிவு.

## 1. போலி எழுத்து

போலி எழுத்து என்னும் முதற் கட்டுரையிலே, நன்னூற் சூத்திரம் தரப்பட்டு, உரையாளர் ஒருசாரார் கருத்து ஆராயப்பட்டுள்ளது.

> "அம்முனிகரம் யகர மென்றிவை
> எய்தினையொத் திசைக்கு மவ்வொ
> டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன" — நன். 125

பவணந்தியார் போலி எழுத்து உணர்த்தினரல்லரெனவும், சந்தியக்கரமே யுணர்த்தினரெனவும் உரையாளர் சிலர் கூறினரென மொழிந்து, உரைப் பொருத்தத்தை ஆராயத் தொடங்கும் கணேசையர், குறிப்பிட்ட உரையாளர்களின் பெயர்களைச் சுட்டிக் கூறவும் விரும்பவில்லை. சந்தியக்கரமே கூறப்படுகிறதென்ற கருத்தைச் சங்கரநமச்சிவாயர் முதலிலே வெளியிட்டார். அக்கருத்தை விளக்கி போலி எழுத்து என்று உரை கூறியோரைச் சிவஞான முனிவர் கண்டித்துள்ளார். தொல்காப்பியச் சூத்திரவிருத்தியிலும் முனிவரின் கருத்து இடம்பெற்றுள்ளது.

பவணந்தியார் கூறியது சந்தியக்கரமன்று என்பதற்குக் கணேசையர் கூறும் நியாயங்களாவன:–

1. சந்தியக்கரம் உணர்த்தியிருந்தால், தாம் குறித்த பொருள் இனிது விளங்கத்தக்க முறையிலே, அம்முன் யகரமிகரமென்றும் அவ்வொடு வவ்வும் உவ்வுமென்றும், ஒத்து எய்தினென்றும் ஐயிசைக்குமென்றும் சூத்திரித்திருப்பர்.

2. மாற்றிப் பொருள் கொள்வதாலும் கூட்டிப் பொருளுரைத்தலாலும் சந்தியக்கரங் கூறுவதாகக் கொள்வாருக்கு, இவையென்னுந் தொகைச் சொல்லாலே இரண்டும் வருமென்பது பொருளேயன்றி இரண்டுங்கூடி யென்பது பொருளாகாது.

3. ஆரியமொழியிற் கூறிய சந்தியக்கரத்தை, தமிழ்மொழிக் கண்ணும் புகுத்தவேண்டி, நன்னூலார் போலியுணர்த்திய சூத்திரத்தைச் சந்தியக்கரமுணர்த்தியதெனக் கொண்டு வலிந்து பொருள் கோடல் உண்மைப் பொருளும் பொருத்தமுமன்று.

4. நன்னூற் சூத்திரத்தின் நேர்பொருளை எடுத்துக்கூறும் கணேசையர், பவணந்தியார் சத்தியக்கரங் கூறியிருந்தால், வடமொழியில் உள்ளவாறு ஏகரஓகரங்களையுங் கூறியிருப்பாரென்பர். போலியெழுத்தால் வரும் பயன் செய்யுளில் வரும் எதுகைக்கண் இவ்வாறு கொள்ள நிற்றலாம்.

நன்னூற் சூத்திர விருத்தியிலே, சிவஞான முனிவர் கொடுத்துள்ள மேல்வரும் விளக்கத்தைப் பார்த்தால், கணேசையர் அளித்துள்ள பதில் புரியும் :—

"......அகரக்கூறும் இகரக்கூறுந் தம்முளொத்து எகரமொலிக்கும், அகரக்கூறும் உகரக்கூறுந் தம்முளொத்து ஒகரமொலிக்கு மெனவுங் கொள்க. .. இச்சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள்கொள்ளாது, தமிழ்நூற் பயிற்சியொன்றுமேயுடையார், எழுத்துப் போலியுணர்த்திற்றென்று பொருள்கொண்டு .. ...உதாரணங்காட்டுவர். அவ்வாறு பொருள் கொண்டு உதாரணங்காட்டுமாற்ருற் பெறும் பயனின்மையானும், வடநூலொடு மாறுபடுதலாலும், அதுபொருந்தாதென்க."

தொல்காப்பியருடைய கருத்தைக் கணேசையர் ஆராய முற்படுகின்ருர். 'அகரவிகர மைகாரமாகு' மென்றும் 'அகரவுகர மௌகாரமாகு' மென்றும் இகர உகரங்களை முன்னர்க்கூறிப்பின்னர் 'அகரத்திம்பர் யகரப்புள்ளி யுமையெனெடுஞ்சினை மெய்பெறத்தோன்று'மென யகரத்தை வேறுவைத்துக் கூறியது போலியெழுத்தாமாற்றை நன்கு புலப்படுத்துவதற்கே; அகரவிகரங்களுக்கிடையே யகரங்கலந்து ஐகாரமாகுமென்பதே அவர் கருத்தாயின், அது தெளிவாக அமையுமாறு சூத்திரிப்பார். 'ஐயெனெடுஞ்சினை' என்ற தொல்காப்பியத் தொடர் சந்தியக்கரம் என்ற கோட்பாட்டுக்கு எதிரானதெனக் கணேசையர் வாதிப்பர். சினையென்பது உறுப்பென்னும் பொருளையுணர்த்தி, ஆகுபெயராய் எழுத்தை யுணர்த்தும். தொல்காப்பியம் எழுத்ததிகாரச் சூத்திரங்கள் நான்கில், சினை என்னுஞ் சொல் அதே பொருளிற் பயன்படுத்தப்பட்டுள்ளமையைக் கணேசையர் காட்டியுள்ளார்.

கணேசையர் தர்க்கமுறையிலே தம்முடைய கொள்கையை நிறுவுவதற்குச் சில தடைகளைத் தோற்றுவித்து, அவற்றுக்கேற்ற விடைகளையுந் தந்துள்ளார். சினையென்பதற்கு, ஐயின் சினையென்ருல் என்னஎன்பது ஒரு தடை. அவ்வாருயின் சூத்திரத்திலே,!ஐயெனெடிலின்சினை என்றிருக்கவேண்டு

மென்பதுவிடை. மொழிக்கு உறுப்பாதல் பற்றிச் சிலேயெனை எழுத்தைக் கூறினுரென்ருல் என்ன என்பது ஒருதடை. எங்கும் எழுத்தென்றே தொல்காப்பியர் ஆளுவர் என்பது அதற்குவிடை. அகரத்திம்பர் யகரப் புள்ளி என்ற சூத்திரத்திலுள்ள இம்பர் என்பது காலப்பின்னு, இடப் பின்னு என்பது தடை. எழுத்ததிகாரச் சூத்திரங்களில் இம்பர் என்று வருமிடங்கள் அனைத்திலும் இம்பர் என்பது காலப்பின்னுக வருகிறது என்பது விடை.

போலியெழுத்து வழக்குப்பற்றி இலக்கணகாரர், உரையாளர், முதியோர்நிலைபற்றிக் கணேசையர் தொடர்ந்து கூறுகிருர். அகரவிகரமைகார மாதலுக்கும் அகரவுகரமௌகார மாதலுக்கும் நச்சினுர்க்கினியர் 'அது கொள்ளற்க' எனவும் பிரயோகவிவேகத்தார் 'இக்காலத்துப் பயன்படாமலே நின்றனவெனினுமமையும்' எனவும் கூறியுள்ளமையைக் கணேசையர் குறிப்பர். போலியெழுத்து எதுகைக்குமட்டுமல்லாது அளபெடைக்கும் பயன்படுவதாகக் கொண்டால், இந்தச் சிக்கல் தீர இடமிருக்கிறது. ஐ என்ற நெட்டெழுத்துக்கு அதன் இனக்குறிலாக இகரமும் ஔ என்ற நெட்டெழுத்துக்கு அதன் இனக்குறிலாக உகரமும் வழங்குவதாலேதான் இவை போலியெழுத்துக்களாகக் கொள்ளப்படவேண்டிய தேவையேற் பட்டிருக்கிறது. கணேசையர் இத்தகைய விளக்கந்தராதபோதும், முதியோர் ஐயன் என்பதை அய்யன் எனவும் ஔவை என்பதை அவ்வை எனவும் எழுதிவந்ததை எடுத்துக் காட்டியது பாராட்டத்தக்கது. மொழியமைப்புப் பற்றிய சிக்கல்கள் வழக்குமொழியை ஆராய்வதாலேயே தீர்க்கப்படத்தக்கன என்பது இன்றையமொழியியலார் கருத்து. தமிழ்நாட்டிலே அமுல் நடத்தப்பட்ட எழுத்துச்சீர்திருத்தத்திலே ஐ,ஔ என்னும் ஈரெழுத்துக்களும் தமிழ்நெடுங்கணக்கிலிருந்து விலக்கப்பட்டுவிட்டதால், இலக்கணகாரர் இந்தப்பிரச்சினையை இனி ஒதுக்கிவிடலாம்.

## 2. ஆறனுருபு பிறிதேற்றல்

'ஆறனுருபுமேற்குமவ்வுருபே' என்ற நன்னூல்–293 உடன் கட்டுரையைத் தொடங்கும் கணேசையர், மயிலைநாதருரையைத்தந்து, அதற்குச் சிவஞானமுனிவரின் மறுப்பைக்கூறி, அம்மறுப்புப் பொருத்தமுடையதன்றெனக் காட்டுகின்ருர். சிவஞானமுனிவரைப் பெயர்சொல்லிக் கண்டிப்பதற்குக் கணேசையர் துணிந்துவிட்டமையை, இக்கட்டுரையிலே காணலாம்.

ஆரும்வேற்றுமையுருபு மற்றையுருபுகளை ஏற்றுவருமெனப் பொருளுரைத்த மயிலைநாதர் சாத்தனது, சாத்தனதனை, சாத்தனதனுல் முதலியனவாக எடுத்துக்காட்டுகள் தந்துள்ளார் உருபு இடைச்சொல்லாதலாலும், சாத்தனதனை என்னும்போது சாத்தனது என்பது துவ்விகுதியும் அகரச் சாரியையும் பெற்று நின்ற பெயராதலினுல், அதுவென்பதை ஆறனுருபென்றல் பொருந்தாது என்பது முனிவரின் மறுப்பு. முனிவர் காட்டியுள்ளவாறே பிரிக்கப்படினும், உடைமைப் பொருளிலேயே வருதலால், ஆறனுருபென வழங்கப்பட்டுள்ளதென ஐயர் கூறுகிருர்.

மயிலைநாதருரை சேனுவரையர், இளம்பூரணர் கருத்துகளோடு ஒத்துப் போகுமாற்றையும் ஐயர் குறிப்பிட்டுள்ளார். மயிலைநாதர், 'சாத்தனது

...... எழுவாயுருபும் ஏற்குமென்றும் ...... வினையும் வினைக்குறிப்புங்கொண்டு முடியு'மென்றும் உரைத்தமையை உற்று நோக்கும்போது, ஆறும் வேற்றுமையுருபு ஏற்றுநின்ற சொல்லே வினைக்குறிப்புப் பெயராய்நின்று பிறிதுருபு ஏற்குமென்பதும், ஏற்குங்காலும் உடைமைப்பொருளும் காணப்படுதலால் ஆறனுருபென்றே வழங்கி வந்தனரென்பதும் தெளிவாகின்றன. 'பிறிது பிறிதேற்றலும்' என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்துக்குச் சேனாவரையரும் இளம்பூரணரும் இக்கருத்தமையவே பொருள்கூறினர்.

சிவஞானமுனிவர் இவ்வுரையை மறுத்து, இதற்கு முதற் சூத்திரத்திற்கு, உருபு இடையிலும் இறுதியிலும் விரிந்து வருமென்றும் அது வடநூலார் மதமென்றும் பொருள் கூறினர். தமிழ் இலக்கணங் கூறவந்த தொல்காப்பியர் வடமொழி யிலக்கணங்கூற வந்தாரென்றல் பொருத்தமில்லையென்றும், கூறினும் 'அளபிற்கோடல் அந்தணர் மறைத்தே' என்பதுபோலச் சூத்திரித்திருப்பாரென்றும், வடநூலார் மதம் இதுவென எடுத்துக் காட்டும் வழக்கு தொல்காப்பியத்தில் இல்லையென்றும், 'வரையார்' எனத் தொல்காப்பியத்தில் வருமிடங்கள்தோறும் வரையாரென்பதற்குத் தமிழ் நூலாசிரியர் என்பவன்றி வடநூலார் என்பது பொருந்தாதென்றும் வடநூலார் மதம் இதுவென வேறுபாடறிதற்குக் கூறினரெனில், அதனாற் போந்த பயன் எதுவுமில்லையென்றும் கணேசையர் வாதிப்பர்.

இவ்வுரை மறுப்பை நிறுவுவதற்குக் கணேசையர் தடைவிடைகள் மூலமாக மேலும்சில ஆதாரங்கள் தருவர். 'ஐயுங்கண்ணுமல்லாப்பொருள் வயின்' என்ற தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரத்தில் வரும் 'தொகாவிறுதியான' என்னும் எதிர்மறை, வேற்றுமைத் தொடரில் வருதலில், அத்தொடரிலேயே உடன்பாட்டுப் பொருளும் வரவேண்டுமல்லவா என்பது தடை. அவ்வாறு வருதல் முனிவர் உரைக்கு இல்லாமையால், அவருரை பொருந்தாதென்பது விடை. 'பிறிது பிறிதேற்றலும்' என்னுஞ் சூத்திரத்தில், இனமல்லவற்றை உடனெண்ணுதல் மரபன்று என்று சூத்திரவிருத்தி கூறியுள்ளதே என்பது தடை. சேனாவரையர் இச்சூத்திரம் வழுவமைதியென்று கூறுதலினால், வழு அமைத்தற்கண் வழுவாவனவற்றை உடனெண்ணுதல் பொருந்துமாதலினால் முனிவர் கூற்று மறுக்கப்படுகிறது என்பது விடை. உருபு பிறிதேற்றலும் என விளங்கச் சூத்திரியாது, 'பிறிது பிறிதேற்றலும்' எனச் சூத்திரித்தது ஏன் என்பது அடுத்த தடை. அதனாலும் ஒரு நயம் தோன்றுதற்கு என்று கூறும் கணேசையர், உருபு இடைச்சொல்லாதலாற் பிறிதுருபை ஏற்காதாதலால், உருபு தன்னை யேற்ற சொல்லோடுகூடிப் பெயர்த்தன்மையெய்தி நின்ற என்ற வேற்றுமை நயமென மேலும் அதனை விளக்குவர்.

தாம் நிறுவ எடுத்துக்கொண்ட மயிலைநாதருரைக்குச் சார்பாகக் கணேசையர் மேலும் சில சான்றுகள் தருவர். சாத்தனது என்பதுபோல வேற்றுமைப் பொருள்பற்றிக் குறிப்புவினைமுற்றுப் பிறத்தல் உண்டென்பது 'அதுச்சொல்வேற்றுமையுடைமையானும்' என்னுந் தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரத்தாலே தெரியவருதலால், சாத்தனது என்பது உடையது முன்னும் உடைமைப்பொருள் பின்னுமாக வந்த குறிப்பு வினைமுற்றாகிச் சாத்தனுடையதாயிற்று எனப் பொருள்தந்து உருபேற்ற சாத்

தனதுபோல நிற்குமென்பதும், பின் அது பெயராய் நின்று உருபேற்குமென்பதும் அக்காலத் துரையாசிரியர்களுக்கு மட்டுமன்றி, நூலாசிரியர்க்குங் கருத்தாதல் துணியப்படும். பிரயோக விவேக நூலாரும் இக்கருத்தினரே. சாத்தனது, சாத்தன என வினைக்குறிப்பு முற்றுகள் ஒருமை பன்மையீறாக அமைவதுபோல உருபேற்ற ஆறும் வேற்றுமைப் பெயர்கள் ஒருமை பன்மையீறாக அமைவது. இரண்டுக்குமுள்ள ஒற்றுமையை வலியுறுத்துவதாகக் கணேசையர் காட்டுவர்.

கட்டுரையின் ஈற்றிலே சிவஞான முனிவர் நன்னூற் சூத்திரத்துக்குக் கூறிய உரையைத் தந்து, அதன் பொருந்தாமையைக் காட்டுவர். எழுவாயாய் நின்ற அவ்வுருபே ஐ முதலிய ஆறுருபுகளையும் ஏற்றுவருமென்பது முனிவருரை. அவ்வுருபு என்பது எழுவாயுருபைமட்டும் சுட்டாதென்பதும், எழுவாயுருபு பிற உருபேற்குமென்பது பொருந்தாதென்பதும், பெயர் வடிவம் உருபேற்றலே கூறப்பட்டதெனில், அது கூறியது கூறலாமென்றும் ஐயர் வாதிக்கிறார். ஆறனுருபு என்பதற்கு ஆறும் வேற்றுமையுருபென்பது பொருளேதவிர, ஆறுருபு என்பது பொருளல்ல என்பதை நிறுவ ஐயர் தொல்காப்பியரதும் நன்னூலாரதும் சொல்லாட்சிகளைச் சான்றாகக் காட்டுவர். மயிலைநாதருரையே பொருத்தமாதல் தெளிக எனக் கட்டுரை முடிவுபெறுகின்றது.

கணேசையர் தம்முடைய கருத்தை நிறுவுவதிலே வெற்றிபெற்றுள்ளாரென்பது தெளிவு. தொல்காப்பியரும் பிழை விட்டுவிட்டார், நன்னூலார் அதே பிழையை ஏற்றுவிட்டாரென்று கொண்டால் மட்டுமே, கணேசையர் இலக்கணக் கொள்கை பொருந்தாதெனக் கூறலாம்.

## 3. தொகை நிலை

கணேசையர் இக்கட்டுரையைச் சூத்திரப் பொருளாராய்ச்சியாகத் தொடங்கவில்லை. கட்டுரையின் தொடக்கத்திலே, 'அவையடக்கம்' போன்ற குறிப்புக் காணப்படுகிறது. தொகைநிலை என்ற கட்டுரை அறிஞர்களை நோக்கி எழுந்ததன்று எனவும் மாணவர்களுக்கு விளக்கம் கருதியே எழுந்ததெனவும் ஐயர் கூறியுள்ளார். இக்கட்டுரையிலே உரையாசிரியருக்கும் சேனாவரையருக்கும் தொகைவிளக்கம்பற்றிக் காணப்படும் வேறுபாடுகளை எடுத்துக்காட்டி, அவர்களுள் எவர் கூற்றுப் பொருத்தமானதென ஆராயப்படுகிறது. தொகைநிலையாவது வேற்றுமை முதலிய பொருள்மேல் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒன்றுபடத் தம்முள் இயைந்துநிற்றலென்றும், தொகுங்காற் பெயரும் பெயரும், பெயரும் வினையும் தொகுமென்றும் சேனாவரையர் கூறுவர். உரையாசிரியர் முதலியோர் பெயரும் பெயருமே தொகுமென்றும் பிளவுபட்டிசைத்தலாலே பெயரும் வினையுந் தொகாவென்றுங் கூறுவார்கள். உரையாசிரியருடைய கருத்து, 'பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப' என்னுந் தொல்காப்பிய எழுத்ததிகாரச் சூத்திரத்துக்கு அவர் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பெயரும் வினையுமாய்ப் பிரிந்தும் பெயரும் பெயருமாய்க் கூடியு மிசைப்ப வேற்றுமையுருபு தொகாது நிலைபெற்றவிடத்தும் அவை தோற்றுதல் வேண்டாத தொகுதிக்கண்ணுமென உரைத்தவுரையானும்,

விளவினைக் குறைத்தான், விளவினைக் குறைத்தவன் எனவும், நிலாத்துக் கொண்டான், நிலாத்துக்கொண்டவன் எனவுங் காட்டிய உதாரணத்தாலும் அறியப்படும். பெயரும் பெயருமே தொகுமென்னும் வடநூல் விதியை மேற்கொண்டவரென உரையாசிரியரைக் குறைகூறும் கணேசையர், தமிழ் வழக்கறிந்து பெயரும் வினையுந் தொகுமெனக் கொண்டவரெனச் சேனாவரையரைப் பாராட்டுகிறார். தமிழ்நூல் ஒன்றே வல்ல உரையாசிரியரெனவும் வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையரெனவும் முனிவர் கூறுவன இங்கே ஒப்புநோக்கத்தக்கன.

தொல்காப்பியரது கருத்து எதுவெனத் துணியமுயலும் ஐயர், மேற்காட்டப்பட்ட சூத்திரத்துக்குச் சரியான பொருள், ''பெயரும் பெயரும், பெயரும் தொழிலும் பிரிந்திசைப்ப வேற்றுமையுருபு நிலைபெறவழியும் அவை ஒருங்கிசைப்ப அவ்வுருபுகள் நிலைபெறுதல் வேண்டாத தொகைச் சொற்கண்ணும்'' என்பர். தொல்காப்பியருக்கும் இதுவே கருத்தாதல், பிரிந்தொருங் கிசைத்தலைப் பெயருக்கும் வினைக்கும் பொதுவாகக் கூறினமையாலும் பின்விரிதலையும் தொகுதலையும் முறைநிரனிறை வகையாலே விளங்க வைத்தமையினாலும் அறியப்படும். உரையாசிரியருக்கும் இக்கருத்து உடன்பாடெனக் கொள்ளும் ஐயர், அவர் 'நிறுத்த சொல்லுங் குறித்துவருகிளவியும்' என்னும் எழுத்ததிகாரச் சூத்திரவுரையிலே, 'இனி ஒழிந்த வேற்றுமைத் தொகையும் உவமைத் தொகையும் தன்னினமுடித்தலென்பதனால், ஈண்டு ஒருசொல்லெனப்படும்', எனக் கூறியதைக் காட்டுகிறார். 'பெயரினாகிய தொகையுமாருளவே' என்னும் சொல்லதிகாரச் சூத்திரத்தால், தொல்காப்பியர் கருத்து மேலும் தெளிவுபெறுகின்றது. முனிவர் இச்சூத்திரத்துக்கு 'வினையினாகிய பெயரும் உள' என்று கூறியுள்ள உரை, உம்மைக்கு அவ்வாறு பொருள்கொள்ள இடமில்லையாதலால் ஐயரால் மறுக்கப்படுகிறது. நன்னூல் தொல்காப்பியர் கருத்துக்கே ஆதரவாக உள்ளது.

சிவஞான முனிவருரையைச் சேனாவரையருரையோடு ஒப்பிடும் ஐயர், ஒருபுடை ஒப்புமையும் ஒருபுடை வேற்றுமையுங்கண்டு, வேற்றுமையாக அமைந்துள்ள பகுதி பொருந்தாதென நிறுவுகிறார். நிலங்கடந்தான், நாய்கோட்பட்டான் என்பவற்றுள் உருபு தொக்கனவாயினும் வினையோடு முடிதலில், 'எல்லாத் தொகையுமொரு சொன்னடைய' என்னுந் தொகையிலக்கணம்பெறாது பக்கிசைத்தலால், இவை தொகாநிலையென்பர் முனிவர். இதனால், இருசொற் பிளவுபடாது நிற்றல் தொகையென்னுங் கருத்தளவில், முனிவர் சேனாவரையரோடு ஒப்பினும், பெயரும் வினையும் இயைவதுந் தொகையெனக் கொள்ளும் சேனாவரையரோடு மாறுபடுகின்றனரென்பது தெரியவருகிறது. நிலத்தைக்கடந்தான் என்பது பிளந்திசைக்கிறதே தவிர, நிலங்கடந்தான் என்பது பிளந்திசைக்கவில்லை என்பது ஐயர் விளக்கமாகும். வடநூலாரின் கருத்தும் இதுவே. வட நூலார் வினையோடு முடிதலைத் தொகையாகக் கொள்ளாததற்குக் காரணம், வடமொழியிலே தொகை அவ்வாறு வினையோடு ஒட்டி அமைவதில்லை. முனிவருரையின் பொருந்தாமையினை எடுத்துக்காட்டுவதற்குக் கணேசையர் சில உதாரணங்களை ஆராய்வர். குன்றக்கூகை பறந்தது என்பதையும் குன்றத்தின்கண் கூகை பறந்து என்பதையும் ஒப்பிடும்போது, குன்றக்

கூகை என்பது ஒரு சொல்லாய் எழுவாயாய் நிற்பது போல, குன்றத்தின் கண்கூகையென்பது ஒருசொல்லாய்ப் பறந்து என்னும் பயனிலை கொண்டு நில்லாது. குன்றத்தின்கண் என்பது குன்றத்தின் கண்பறந்த தெனவும் பொருள் மயக்கம் படுவதால், குன்றத்தின் கண்ணுள்ள எனவிரித்து முடித்தால், அங்கே உட்டொடர் பலவாயவிரியாகுமன்றித் தொகையாகாது. இவற்றைக்கொண்டு, உருபுதொகப் பெயரும்பெயரும், பெயரும் வினையும் இயைவதே தொகையென ஐயர் நிறுவுகிறார். சேனாவரையரையும் தம்முடைய கருத்துக்கு ஆதரவாளார்போல முனிவர் கூறிச் செல்வது, ஐயராற் கண்டிக்கப்பட்டுள்ளது. சேனாவரையர் செய்தான் பொருள், இருந்தான் மாடத்து என்பவற்றைத் தொகாநிலையென்றது வினைமுன்னும் பெயர் பின்னுமாக மாறிப்பிளவுபட்டு நிற்றலாலன்றி, வினையோடுமுடிதல் பற்றியன்று என்பதை நன்கு அறிந்தும், தாம் பிடித்ததையே சாதிக்குமாறு, சேனாவரையர்க்கு அதுவே கருத்துப் போலுமென்று கூறியுள்ளாரென ஐயர் கண்டிப்பர். முனிவர் நச்சினார்க்கினியரைக் கண்டிப்பதற்குப் பயன்படுத்திய தொடர், முனிவரைக் கண்டிப்பதற்கு ஐயராற் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சேனாவரையரையும் நச்சினார்க்கினியரையும் ஒப்பிடும் ஐயர், நச்சினார்க்கினியர் வேறுபடுமிடங்களின் பொருத்தமின்மையை எடுத்துக்காட்டுகிறார். செய்தான்பொருள், இருந்தான் மாடத்தது என்பன பிளவுபட்டிசைத்தலால், இருசொற்றொகுதல் தொகையெனக்கொண்ட சேனாவரையர் கருத்து நிரம்பாதெனக்கொள்ளும் நச்சினார்க்கினியர் உருபுதொகுதலே தொகையென்றார். தொகைச்சொல்லாவது ஒட்டி ஒருசொல்லாய் வரவேண்டுமென்பதே தொல்காப்பியர் கருத்தாதலில் செய்தான் பொருள், இருந்தான் மாடத்து என்பன தொகையே மாறிப்பிளவுபட்டு, ஒட்டி ஒருசொல்லாய் வாராமையின், சேனாவரையர் அவை தொகையன்று என்றார். தொகைமாறி நின்றதென்பதே, நன்னூற் பொதுவியல் 12-ஆம் சூத்திரத்திற்குச் சங்கரநமசிவாயர் கூறிய உரையிலிருந்தும் தெரியவருவதாம். 'எல்லாத்தொகையும் ஒருசொன்னடைய' எனத்தொல்காப்பியர் கூறியதை நுணுகிநோக்காத நச்சினார்க்கினியர் பெயரும்வினையும் பிரிந்திசைத்த வழியும் வேற்றுமையுருபு தொகுதலின்தொகையெனத் தாங்கொண்ட பொருளைச் சாதிக்குமாறு அச்சூத்திரத்திற்சப் பொருந்தாவுரை கூறினார். சொற்பிளவுபடினும் உருபு தொகுதலே தொகையென்ற நச்சினார்க்கினியர் கருத்தின் பொருந்தாமை, சங்கரநமசிவாயர் 'பெயரொடு பெயரும்' என்னும் நன்னூற் பொதுவியற் சூத்திரத்துக்குக் கூறிய உரையாலும் புலப்படுவதை ஐயர் காட்டுவர். தொகைநிலை பற்றி, நச்சினார்க்கினியர் சேனாவரையரிலிருந்து வேறுபடுமிடங்களை ஐயர் தொடர்ந்து மறுப்பர். 'அதுவென் வேற்றுமையுயர்திணைத் தொகைவயின்' என்னுஞ் சொல்லதிகாரச் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் நேரேபொருள் கொள்ளாது, சொற்களை இயைபின்றி மாற்றியும் இல்லாதபொருளை வருவித்தும் தொல்காப்பியர் கருத்தோடு முரணப்பொருள்கொண்டு பலவாறு கூறுவர். நின்மகள் என்பது பயனிலை கொள்ளாது நின்ற வழிநினக்கு மகள் என விரியுமாதலாலும் நம்பிமகன் என்பது பயனிலை கொள்ளுங்கால் நம்பிக்கு மகன் வந்தான் என முடியாமையின் நம்பியுடையமகன் அல்லது நம்பிக்குப் பிறந்த மகன் என்றாதல் விரித்தல் வேண்டுமாதலாலும், நினக்கு மகளா

யுள்ளவன் என்பது ஆக்கமெனில், இயற்கையைச் செயற்கையாகக் கூறிய இலக்கணையெனலாம், ஆதலாலும் நச்சினார்க்கினியர் கூறியன நிராகரிக்கத் தக்கன என்பர் ஐயர்.

சேனாவரையர் கருத்து 'பெயரொடுபெயரும் வினையும் வேற்றுமை' எனத் தொடங்கும் இலக்கண விளக்கச் சூத்திரத்தாலும் அதன் உரையாலும் உறுதிப்படுவதையும் பிரயோக விவேகம் சமாசம் – 2இன் உரையிலே தொகைநிலை, தொகாநிலையென்பன விளக்கப்படுமாற்றால் வலுப்படுவதை யும் எடுத்துக்காட்டிக் கணேசையர் கட்டுரையை நிறைவு செய்துள்ளார். சேனாவரையர் இலக்கணக் கொள்கையின் சில கூறுகளுக்குச் சிலர் ஏற் படுத்திய தடைகளை ஐயர் தக்க முறையிலே விடுவித்துள்ளார்.

## 4. அளபெடை

அளபெடை என்ற பெயர்ச்சொல் விளக்கப்பட்டு, நன்னூலாரின் கூற்று கட்டுரையின் தொடக்கத்திலே தரப்பட்டுள்ளது. அளபெடுக்கும் போது, நெட்டெழுத்தேழும் அளபெடுக்குமென்றும், அவை இவ்வளவு மாத்திரை நீண்டனவென அவ்வவற்றுக்கு இனமாகிய குற்றெழுத்துகள் காட்டி அவற்றின் பின்னே நிற்குமென்றும் நன்னூலார் கூறுவர். தொல் காப்பிய எழுத்ததிகார உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், நச்சினார்க் கினியரென்னு மிருவரும் நெடிலுங் குறிலுஞ் சேர்ந்துநின்று அளபெடுக்கு மென்னும் பொருள்பட, 'நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய' என்னுஞ் சூத்திரத்திற்கு முறையே, ''நீண்ட மாத்திரையையுடைய அளபெடை யெழுத்துப் பெறவேண்டின், மேற்கூறிய ஓரளபும் இரண்டளபுமுடைய குறிலையும் நெடிலையும் பிளவுபடாமற் கூட்டியெழுக என்று கூறுவர் ஆசிரியர்'' என்றும், ''வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் ஓசையும் பொருளும் பெறுதல் காரணமாக இரண்டுமாத்திரை பெற்ற எழுத்து அம்மாத்திரை யின் மிக்கொலித்தலை விரும்புவாராயின், தாங்கருதிய மாத்திரையைத் தருதற்குரிய எழுத்துக்களைக் கூட்டி, அம்மாத்திரையை எழுப்புக என்று கூறுவாராசிரியர்'' என்றுங் கூறுவர். நன்னூலார் கூற்று, உரையாளர் கூற்று ஆகியவற்றுள் எது பொருத்தமுடையதென்பதே கணேசையர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட விடயம்.

உரையாளர் இருவருரையும் பொருந்தாதெனக் கணேசையர் காட்டத் தொடங்குகிறார். அளபெடையென்பது அளபெடுத்தலையுடைய ஓரெழுத் தையே உணர்த்தும். ஆதலால், ஓரெழுத்தே மிக்கு ஒலிக்கவேண்டும். இரண்டெழுத்துக்கூடி ஒலிப்பதாயின் எவ்வளவொலிக்கும், எவ்வாறொலிக்கும் மூன்று மாத்திரை ஒலிக்குமா எனப் பல பிரச்சினைகள் தோன்றும். நீட்டம் வேண்டி ஓரெழுத்தை நீட்டுங்கால், அதனையே வேண்டிய அளவு நீட்டலா மாதலால், மற்றோரெழுத்துக் கூட்டிநீட்டவேண்டியதில்லை. இன்னிசை யளபெடையில், குற்றெழுத்தொன்றே நெடிலாகநீண்டு பின்னளபெடுத்தல் கண்கூடு. எழுத்துக்களே சேர்ந்து ஒலிக்குமென்பது தொல்காப்பியருக்குக் கருத்தாயின், நெடிலுங் குறிலும் வருமெனச் சூத்திரித்திருப்பர்.

தொடர்ந்து, தொல்காப்பியச் சூத்திரத்துக்குக் கணேசையர் பொருளும் விளக்கமுங் கூறுவர். மாத்திரை மிக்கொலித்தலை விரும்பின், விரும்பிய மாத்திரையையுடைய எழுத்துக்களை அவ்வெழுத்தோடு கூட்டி, அவ்வெழுத்தினிசையை எழுப்புக என்று சொல்லுவர் புலவர் என்பதே ஐயர்தரும் நேர்பொருள். தொல்காப்பியச் சூத்திரங்கள் ஏழை எடுத்துக்காட்டும் ஐயர் அவற்றை நோக்கும்போது ஓரெழுத்தே நீளுமென்பதன்றி, இரண்டெழுத்துக்கூடி நீளுமென்பது ஆசிரியர் கருத்தன்மையாகிறது. அளவின் பொருட்டு அவ்வளபுடைய கூட்டப்படும் எழுத்துகள் வரிவடிவில் அறிகுறியாய் வரும். 'குன்றிசை மொழிவயினின்றிசை நிறைக்கும்' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தினாலும், குற்றெழுத்து இசைநிறைப்பதன்றி, நெட்டெழுத்தோடு கூடிஅளபெடுக்குமென்பது பெறப்படாது. குற்றெழுத்துகள் குறியாய்வரும். வரும்போது, அவ்வந்நெடில் அவற்றுக்கினமான குறிலையே குறியாகக் கொள்ளும். நெட்டெழுத்து நீளுங்கால், ஒவ்வொரு மாத்திரை மிக்கே நீளுமாதலினால், இரண்டு மாத்திரை நீட்சிக்கு, இரண்டு குற்றெழுத்துகளேயன்றி, ஒருநெட்டெழுத்தைக் குறியாக எழுதார். 'அளபெடை மிகூஉமிகரவிறுபெயர்' என்னுந் தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரத்துக்குச் சேனாவரையர் கூறிய உரையையும், ஒன்று நின்று பின்னரும் ஒன்று கூடியே இரண்டாவதன்றி இரண்டென்பது ஒன்று இன்றாகலின் என்னும் நச்சினார்க்கினியர் கூற்றையும் தம்கருத்துக்குச் சார்பானவையாகக் கணேசையர் காட்டுவர். தொல்காப்பியர் குற்றெழுத்து இசைநிறைக்குமென்றதனால், அக்குற்றெழுத்து எழுத்தாகக் கொள்ளப்படாதென்பது தெளிவு.

கணேசையருடைய எட்டுக் கட்டுரைகளுள்ளும், சிவஞானமுனிவர் மறுப்புக்கு உள்ளாகாதது இந்தக் கட்டுரையுள் மட்டுமே. தம்முடைய கருத்துக்கு ஆதரவாகச் சிவஞானமுனிவருடைய கருத்துகள் சிலவற்றைக் கணேசையர் இக்கட்டுரையிலே காட்டியுள்ளார். ஐயர் சிவஞானமுனிவரின் இலக்கணக் கொள்கைகளிலே குறைகளிருப்பனவாகத் தாம் கருதிய இடங்களையே கண்டிக்கிறாரே தவிர, முனிவர்மேல் வெறுப்புடையவரல்லர் என்பது இக்கட்டுரையிலிருந்து புலனாகிறது. முனிவர் நன்னூல்விருத்தியுரையுள், 'இசைகெடின்' என்னுஞ் சூத்திரத்துவரும் 'குறியே' என்பதற்கு வரிவடிவில் அறிகுறியாம் என்றும், 'குற்றுயிர் அளபினீறும்' என்பதற்கு ஒலிவடிவின் ஈறும் என்றும் பொருந்தக் கூறியுள்ளார். அளபெடை தனிஎழுத்தன்று என்ற ஐயரின் கருத்துக்கு ஆதரவாக, "அளபெடை அந்நெட்டெழுத்தோடு குற்றெழுத்தொத்து நின்று நீண்டிசைப்ப தொன்றாயினும், மொழிக்காரணமாய் வேறுபொருடாராது இசைநிறைத்தல் மாத்திரைப்பயத்ததாய் நிற்றலின் வேறெழுத்தென வைத்தெண்ணப்படாதாயிற்று" என்னும் தொல்காப்பியச் சூத்திரவிருத்திப் பகுதி எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஒரே ஓரிடத்திலே முனிவருரையை உடன்படமுடியாதவிடத்திலே, உரையாளரின் உரைக்கு இயைய அவர் அவ்வாறு கூறினரேயன்றி, அவர் கருத்து அதுவல்லவெனக்கூறியுள்ளார்.

அளபெடைபற்றிச் சங்கரநமசிவாயர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பாணினியார் ஆகியோருடைய கருத்துகள் சிலவற்றைக் கணேசையர் தொடர்ந்து காட்டுகிறார். அளபெடையை இரண்டெழுத்துங்கூடி மூன்று மாத்திரையாயிற்றெனக் கொள்ளில், இரண்டெழுத்தொலி அங்ஙனமின்மை

யாலும், அளபெடையென்னும் பெயர் எலாமையாலும், அவ்வாறு கொள்ளாது, அறிகுறியே என்று 'இசைகெடின்' என்னும் நன்னூற் சூத்திர வுரையிலே சங்கரநமச்சிவாயர் கூறியுள்ளமையால், நெடிலுங்குறிலுஞ் சேர்ந்து பிளவுபட்டொலிக்குமேயன்றிப் பிளவுபடாதொலிக்கமாட்டா என்பர் ஐயர். நச்சினர்க்கினியர் கூற்றுகளிலே சிலவற்றைக் கணேசையர் ஏற்றுக்கொள்கிறார். 'நீட்டம்வேண்டின்' என்பதற்கு 'இரண்டுமாத்திரை பெற்ற எழுத்து அம்மாத்திரையின் மிக்கு ஒலித்தலை விரும்புவாராயின்' என்றும், 'அந்நெட்டெழுத்துக்களே யளபெடுத்தலிற் சொல்லாதலெய்தின' என்றும் நச்சினர்க்கினியர் கூறுவதை ஏற்றுக்கொள்ளும் ஐயர் இரண்டு கூற்றுகளை ஏற்றுக்கொள்ள முடியாதவிடத்து, 'அவ்வாறு கூறினர் போலும்,' 'இக்கருத்து நோக்கிப்போலும்', எனச் சமாளிப்பர். நெட்டெழுத்தொன்றே நீண்டு அளபெடுக்குமென்பது சேனவரையரது துணிவுமாம் என்று காட்டுவதற்கு அவர் சொல்லதிகாரம் 634ஆம் சூத்திரத்துக்குக் கூறிய உரையை ஐயர் எடுத்துக்காட்டுவர். வடமொழி இலக்கணகாரர் பாணினியார் ஒரெழுத்தே நீண்டொலிக்குமென்ற கருத்துடையராதலையுங் காட்டுகிறார். நன்னூலாரின் இலக்கணக் கொள்கை சிவஞான முனிவரின் இலக்கணக் கொள்கையாகிக் கணேசையரின் இலக்கணக் கொள்கையாகவும் ஆவதை இக்கட்டுரையிலே காணலாம்.

## 5. பிறிதுபிறிதேற்றல்

இறுதி நான்கு கட்டுரைகளிலும் ஒரு பொதுத்தன்மை காணப்படுகிறது; கணேசையர் நேரடியாகவே தொல்காப்பிய ஆராய்ச்சியில் இறங்கி விடுகிறார். இவற்றுள் முதல்மூன்று கட்டுரைகளும் தொல்காப்பியச் சொல்லதிகார ஆராய்ச்சியாக அமைகின்றன. இம் மூன்று கட்டுரைகளிலும் சிவஞான முனிவருக்குமட்டு மல்லாது, கலாநிதி பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி என்ற தம்முடைய சமகால அறிஞருக்கும் கணேசையர் பதிலிறுக்கவேண்டியவராகிறார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே வடமொழிப் பேராசிரியராக விளங்கிய கலாநிதி சுப்பிரமணிய சாஸ்திரி வடமொழியோடு தொடர்புபடுத்தித் தமிழ் இலக்கணக் கொள்கைகளின் வரலாற்றை ஆராய்ந்தவர். 'செந்தமிழ்' என்ற சஞ்சிகையிலே தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு என்ற தலைப்பிலே தொடர்கட்டுரை எழுதிவந்தவர். வடமொழி, தமிழ், ஆங்கிலம் என்பனவற்றிலே புலமை பெற்றிருந்த பல்கலைக்கழகப் பேராசிரியரோடும் கணேசையர் மோதியிருக்கிறாரென்பது கவனிக்கத்தக்கது. வடமொழியாளரான சாஸ்திரி சிவஞான முனிவர் இலக்கணக் கொள்கைகளிலே ஈடுபாடுடையவராகக் காணப்படுகிறார்.

'பிறிதுபிறிதேற்றல்' என்ற தலைப்பிலான கணேசையரின் கட்டுரை பொருளடக்கத்தில் இரண்டாவது கட்டுரையான 'ஆறனுருபு பிறிதேற்றல்' என்பதனோடு தொடர்புடையது. கணேசையர் சிவஞான முனிவரின் கொள்கையைக் கண்டித்து, அந்தக் கட்டுரையை எழுதியபின், சுப்பிரமணிய சாஸ்திரி எழுதிவந்த சொல்லதிகாரக் குறிப்புகளிலே, ஐயருக்கு உடன்பாடில்லாத விடயங்களும் காணப்பட்டதால், அவற்றுக்கு விடையளிப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

''பிறிது பிறிதேற்றலு முருபுதொக வருதலு
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப...... தொல். சொல். 588

இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் என்னும் மூவரும், ஆறும் வேற்றுமையுருபு மற்றைய உருபுகளை ஏற்றலும் எனப் பொருளுரைத்துச் சாத்தனதனை, சாத்தனதனால் சாத்தனதன்கண் என உதாரணங் காட்டினார்கள். அப்பொருள்பற்றிச் சொல்லதிகாரக் குறிப்பாசிரியர் நிகழ்த்தியுள்ள இருதடைகளை ஐயர் சுட்டுகிறார். (சமகால அறிஞரைப் பெயர் சொல்லிக் கண்டிப்பது நாகரிகமன்று என்று கருதிப்போலும், சம்பந்தப்பட்ட இடங்களிலெல்லாம், ஐயர், சாஸ்திரி என்று குறிப்பிடாமல், குறிப்பாசிரியர் என்றே கூறியுள்ளார்). சாத்தனதாடை என்பது சாத்தனது ஆடை எனப் பொருள்படுதல்போலச் சாத்தனதனை என்பதிலே சாத்தனது என்பது சாத்தனுடைய எனப் பொருள்படாது, சாத்தனுடைய பொருள் எனப் பொருள்படுதலிற் பெயர் உருபேற்றதன்றி, உருபு உருபேற்றதன்று என்பது ஒன்று. மற்றொன்று, சாத்தனது என்பது பெயராயின் பெயர் உருபேற்றலின்கண் மாறுபாடொன்றுமின்மையின, அது கூறல்வேண்டியதின்று என்பது.

ஆறும் வேற்றுமை அது உருபிற்கு அஃறிணையொருமைப் பொருளை 'இதனது' என்பதனாலே குறிப்பித்துள்ளமையினால் உரையாளர்கள் மூவரும் 'அது' ஒருமையுருபென்று கூறினார்களென்றும், அகத்தியச் சூத்திரமும் நன்னூற் சூத்திரமும் ஆறும் வேற்றுமையுருபு அஃறிணையொருமைப் பொருளை உணர்த்துவதைத் துணிய உதவுகின்றனவென்றும் ஐயர் கருதுகிறார். சாத்தனது என்பது சாத்தனுடையது எனப் பொருள்படுமன்றிச் சாத்தனுடைய எனப் பொருள்படாது. சாத்தனதாடை என்னும்போது, அது உருபு பெயராய் நின்றே ஆடையொடு தொடர்ந்தாற்போலச் சாத்தனதனை என்னும்போதும் அது உருபு பெயராய் நின்றே 'ஐ' உருபோடு தொடரும். கணேசையர் இதனைக்கொண்டு முதலாவது தடையை நிராகரிக்கிறார். ஏனைப் பெயர்போலாது உருபே பெயராய் நின்று உருபேற்றலால், இரண்டாவது தடைக்குந் தடையுண்டாயிற்று. சாத்தனது என்பது சாத்தனுடைய எனப் பொருள்படுமாயின் ஒருமை, பன்மை, உயர்திணை, அஃறிணை என்ற நியதியின்றி எங்கும் அது உருபு வரலாமெனப்பட்டு நூலாசிரியர்கள் கருத்துகளோடு மாறுபடுமெனவும் உயர்திணைப் பொருளில் வரும் ஆறும் வேற்றுமைத் தொகையில் 'அது' உருபு விரிக்கப்படாதெனத் தொல்காப்பியர் கூறிய சூத்திரமும் வேண்டியதில்லையெனவும் உடைய என்பது ஆறும் வேற்றுமைக்குரிய உடைமைப் பொருள் இது என்பதைக் காட்டற்கு விரிக்கப்படும் சொல்லுருபேயன்றி, 'அது'வின் பொருளன்று எனவும் கணேசையர் வாதிக்கிறார்.

'அதுச்சொல் வேற்றுமையுடைமையானும்' என்னும் சொல்லதிகாரச் சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையைத் தம் கருத்துக்கு ஆதரவாகக் கணேசையர் எடுத்துக் காட்டுகிறார். நச்சினார்க்கினியர், ''உடைமைப் பொருளாவது ஒன்றற்கு ஒன்றை உரிமை செய்துநிற்பது. அஃது இப்பொருளினுடையது இப்பொருளென்றும். இப்பொருள் இப்பொருளினுடையதாயிருந்தது என்றும் இப்பொருளுடைத்தாயிருந்தது இப்பொருளென்றும் மூவகைப்படும்; அவை முறையே, 'சாத்தனதாடை' என ஆற

னுருபாயும், 'ஆடைசாத்தனது' எனவும், 'குழையன்', 'கச்சினன்' எனவும் வினைக்குறிப்பாயும் நிற்கும்'' என்று கூறியதைக் கணேசையர் காட்டியுள்ளார். 'இறுதியுமிடையும்' என்னும் வேற்றுமை மயங்கியற் சூத்திரவுரையிலே, சாத்தனதாடை என்னும்போது 'அது'வென்பது பெயராய் நிற்குமென நச்சினார்க்கினியர் கூறியதை நினைவுறுத்திய ஐயர் அதே சூத்திரவுரையிற் சேனாவரையர் ஆறனுருபேற்ற பெயர் உருபோடு கூடிப் பெயராயும் வினைக் குறிப்பாயும் நிற்றலுடைமையால், அந்நிலைக்கண் ஆடை சாத்தனது என இறுதிக்கண் நிற்குமென்று கூறியதையும் உடன்பாடாக எடுத்துத்தந்தார். முற்று 'அது உருபிற்குக் கூறிய உடைமைப் பொருளுணர்த்தி வருதலினாலேதான், சாத்தனதாடை என்பது ஆடை சாத்தனது என நிற்குமென்று இளம்பூரணரும் விளக்கினார்.

தொடர்ந்து, ஆறும்வேற்றுமையின் சிறப்பியல்புகள் சிலவற்றைக் கணேசையர் புலப்படுத்தியுள்ளார். சாத்தனது ஆடை என்னும்போது வரும் 'அது' தொக்கு, சாத்தனுடை என நின்றவழியும், சாத்தனுடைய பொருளாகிய ஆடை என்று விரிதற்கேற்புடைமை கண்டே. சாத்தனது ஆடை என்பதை விரியென்றும் சாத்தனுடை என்பதைத் தொகையென்றும் வழங்குகின்றனர். வடநூலார் ஆறும்வேற்றுமை விரியை (ராமஸ்ய வஸ்திரம்) இராமனுடைய ஆடையென்றும், தமிழ்நூலார் இராமனது ஆடையென்றுங் கொள்ளுதலில், அது என்பதற்கு உடைய எனப் பொருள் கொண்டால், குழப்பம் ஒன்றும் வராதேயெனின், தமிழ்நூலார் உருபிற்கு ஒருமை பன்மை கூறியுள்ளமையில், வடமொழியில் வரும் ஆறும் வேற்றுமைக்கும் தமிழில்வரும் ஆறும் வேற்றுமைக்கும் சிறிது வேறுபாடுண்டு. சுப்பிரமணிய சாஸ்திரி சிவஞான முனிவரைப் பின்பற்றியே இரண்டு தடைகளையுங் கூறியிருக்கவேண்டுமெனக் கொள்ளும் ஐயர் உரையாளர் உரையில்யாதுந் தடையில்லையெனக் கூறிக் கட்டுரையை நிறைவு செய்கிறார்.

## 6. தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி

இது 'செந்தமி'ழின் இரண்டு பகுதிகளிலே வெளிவந்த நீண்ட கட்டுரையாகும். கட்டுரையின் முற்பகுதி சிவஞான முனிவரையும் பிற்பகுதி சுப்பிரமணிய சாஸ்திரியையும் கண்டிப்பனவாக அமைந்துள்ளன. ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட சூத்திரமாவது:-

> வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
> ஈற்றுநின் றியலுந் தொகைவயிற் பிரிந்து
> பல்லா றுகப் பொருள்புணர்ந் திசைக்கு
> மெல்லாச் சொல்லு முரிய வென்ப ..... தொல். சொல். 567.

இச்சூத்திரத்துக்குத் தொல்உரையாளர் மூவரும் ஒரே கருத்தினராக உரை வகுத்துள்ளனர். மூவர் உரையுள்ளே சேனாவரையர் உரை மிகவும் விளக்கமாக அமைந்துள்ளதனால், கணேசையர் அவ்வுரையைத் தந்துள்ளார். உரையாளரின் பொருளை மறுத்து முனிவர் தொல்காப்பியச் சூத்திரவிருத்தியுள் வேறு உரை கூறியுள்ளதனால், ஐயர் அவ்வுரையினையுந் தந்துள்ளார். இருதரப்பட்ட உரைகளுள்ளும் எது பொருத்தமானது என்பதே

கட்டுரை முற்பகுதியிலே ஆராயப்படுகிறது. குறிப்பாசிரியர் முனிவருரையே பொருத்தமானதோ என்று கருதக்கூடிய முறையிலே சில குறிப்புகள் தந்துள்ளார். அக்குறிப்புகளை நிராகரிப்பனவாகக் கட்டுரையின் பிற்பகுதி அமைகிறது.

சேனாவரையரும் முனிவரும் கூறியுள்ளவற்றை முதலிலே நோக்கலாம். சேனாவரையர், ''வேற்றுமைத் தொகையை விரிக்குமிடத்து, வேற்றுமையுருபேயன்றி, அன்மொழித்தொகை விரிப்புழி, வேறுபட்டுப் பல்லாருக அன்மொழிப் பொருளோடு புணர்ந்துவரும் எல்லாச் சொல்லும் விரித்தற்குரிய'' என்னுங் கருத்தமையப் பொருள் கூறிப் பொற்றொடியரிவை, மட்குடம் என்பன பொற்றொடியை அணிந்த அரிவையெனவும் மண்ணானியன்ற குடம் எனவும் வருவதை உதாரணங்காட்டினார். முனிவர், ''(ஒத்தினிறுதிக் கட்புறனடை) காப்பினொப்பின் ... என்றற்றொடக்கத்தனவாக ஆண்டுக் கூறிய பொருளேயன்றி, இன்னும் வேற்றுமைப் பொருளை விரித்துக் கூறுங்கால், அக்காப்பினொப்பின் என்றற்றொடக்கத்துத் தொகைச் சொற்களின் வேறுபட்டுப் பொருளொடு புணர்ந்திசைக்கும் எல்லாச் சொற்களும் ஈண்டு கோடற் குரியவென்பர் என்றவாறு முடிக்குஞ் சொல்லைப் பொருள் என்கிறார்...... காப்பினொப்பின்...... முதலிய சொற்கள்...... தொகுத்த மொழியாய் நிற்றலின் அவற்றைத் தொகையென்றும் ..... தொடர் மொழிகளின் ஈற்றுச் சொற்களை 'ஈற்றினின்றியலுந் தொகை' என்றும்...... கூறினார்'' என்பர்.

முனிவருரையை மறுத்துச் சேனாவரையருரையை நிறுவும் பகுதி தொல்காப்பியர் கருத்தை ஆராய்தல், முனிவர் கூறிய தடைக்குத்தடை, விரியிலக்கணங் கூறியது கூறலன்மை என மூன்றாக வகுப்பதற்கு இடந்தருகிறது. 'காப்பினொப்பின்' என்பது பொருள்பற்றிக் கூறப்பட்டதாகலின் காவல் முதலிய பொருள்பற்றி வரும் சொல்லெல்லாங் கொள்ளப்படுமாகலின், அதற்கென வேறொரு சூத்திரம் வேண்டாம். தொல்காப்பியர் கருத்து அதுவானால் அக்கருத்துத் தெளிவாக அமையும்படி சூத்திரித்திருப்பார். முனிவர் தம் முரையுள் 'வேற்றுமைப் பொருளை விரிக்குங்காலை' என்பதற்கு 'இன்னும் வேற்றுமைப் பொருளை விரிக்குமிடத்து' என்று பொருளுரைத்து, ஈண்டுப் பொருளென்றது வருமொழியை என்றார். அவ்வுரை முன்னொடு பின் முரணாகிறது. தொகைமொழியென்பதே தொல்காப்பியர் கருத்தானால், அதை விளங்கச் சொல்லியிருப்பார்.

முனிவர் சேனாவரையருரையின்மேல் நிகழ்த்திய தடை இரு கூறுகள் கொண்டுள்ளது. வேற்றுமைத்தொகையை விரிக்குங்காலை · என்னாமையாலும், வேற்றுமைத்தொகை விரியுமாறு வேற்றுமையியலுட்கூற ஓரியைபு இன்மையாலும், வேற்றுமையியலுள் உருபும்பொருளும் உருபுநிற்குமிடமும் மட்டுமே கூறியொழிந்தாரன்றி, வேறொன்றுங் கூறாமையாலும், வேற்றுமைத்தொகை விரியுமாறு, 'வேற்றுமையியல' என்பதனாற் பெறப்படுதலில் வேறுகூற வேண்டாமையாலும், வேண்டுமெனில் உவமைத்தொகை விரியுமாறுங்கூறவேண்டுமாதலாலும், அச்சூத்திரத்திற்கு அது பொருள் அன்று என்பது முனிவரின் வாதமாகும். தொகையைப் பொருளென, வேறு நான்கு சூத்திரங்களிலும் தொல்காப்பியர் கூறியுள்ளமை ஐயராற் காட்

டப்படுகிறது. தொகை விரிப்புழி மயங்கும் மயக்கம் அடுத்துவரும் வேற்றுமை மயங்கலியலிற் கூறப்படுவதனுல், அதற்கு இயைய இங்கே தொகை விரிக்குமாறு கூறினுரெனச் சேனுவரையர் இயைபு கூறியுள்ளார். வேற்றுமையியலுட் கூறியது விரியிலக்கணமேயாதலினுல், அதனேடியையத் தொகைவிரியிலக்கணம் கூறுவதும் பொருந்தும். 'வேற்றுமையியல' என்பதனுல் வேற்றுமைத்தொகையிலக்கணமே உணர்த்தப்பட்டது. உவமைத் தொகையை விரிக்கும்போது, வேறுசொற்பெய்து விரித்தல் வேண்டா. அன்மொழித்தொகை பல்லாற்ருனும் பொருள் புணர்ந்திசைக்குஞ் சொல்லாலன்றி விரியாமையில், அதனை முதலிலே சொல்லி, அவ்விதிஇயைய இதற்குங் கொள்ளவைத்தார். விதி அநுவாதமுகத்தாற் கொள்ளவைத்தல் தொல்காப்பியருக்கு வழக்கு என்பதை நிறுவ, ஐயர் நான்கு சூத்திரங்களைக் காட்டியுள்ளார்.

முனிவர், 'வேற்றுமைத்தொகையே வேற்றுமையியல' என்னுஞ் சூத்திரத்துக்குக் கூறிய உரையைத் தந்து, ஐயர் அதனை மறுத்துள்ளார். வேற்றுமைத் தொகை விரியும்போது, தொகாநிலே வேற்றுமையியல்பாய் விரியும்; எனவே அங்ஙனம் விரியுமியல்பை உடையது வேற்றுமைத் தொகை என்றதாயிற்று என்பர் முனிவர். தொகை இவையெனக் கூறி, முறையே அவற்றின் இலக்கணங் கூறப்புகுந்த ஆசிரியர் இவ்வாறு தொகுவது வேற்றுமைத் தொகையென அதனியல்பு உணர்த்தாது, அது விரியுமாறு கூறி, அவ்வழி வேற்றுமைத் தொகையிலக்கணங் கூறினுரென்றல் மலேவுகூற்று என்பர் ஐயர். 'அளபெடைப்பெயரே அளபெடையியல' (தொல். 634) என்பதற்குப்போல, 'வேற்றுமைத்தொகையே வேற்றுமையியல' என்பதற்கும் பொருள் கொள்ளவேண்டும். அவ்வாறு கொள்ளச் சேனுவரையருரையே பொருத்தமென்பது தெளிவாகுமென ஐயர் முடிவு கட்டுகிருர்.

கட்டுரையின் பிற்பகுதியிலே, கணேசையர் குறிப்பாசிரியர் இச்சூத்திரம்பற்றிக் கூறிய சில விடயங்களை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்கிருர். சேனுவரையர் "இதனை 'வேற்றுமைத் தொகையேயுவமைத் தொகையே' என்னுஞ் சூத்திரத்தின் பின் வைக்கவெனின் அதுவுமுறையேயாயினும் இனி வருஞ் சூத்திரங்களானவை வேற்றுமைத் தொகைவிரிபற்றிய மயக்கமுணர்த்தலான் ஆண்டுப்படுமுறையுணர்த்துதல் ஈண்டுமியையுடைத்தென்க" என்று கூறியுள்ளார். இது ஆராயத்தக்கது என்றும், "வேற்றுமை மயங்கியலில் தொகை, தொக, தொகா என்ற சொற்கொண்ட சூத்திரங்கள் ஐந்தே; அவைகளுள் 'ஓம்படைக்கிளவி' என்னும் சூத்திரத்துள்ள தொகை என்னுஞ் சொல்லைத் தவிர, மற்றைச் சூத்திரங்களிலுள்ள தொகை, தொக, தொகா என்ற சொற்கள் சமாசனைக் குறிக்கின்றனவா அல்லவா என்பதை அவ்வச் சூத்திரங்களுட் கூறுவோம். எவ்வாருயினும், இவ்வைந்து சூத்திரங்களுள் ஒன்றிலாவது, வேற்றுமைத்தொகையை விரிக்குமிடத்து வேற்றுமையேயன்றி அன்மொழிப்பொருளோடு புணர்ந்துவரும் எல்லாச் சொல்லும் உணர்த்தப்படவில்லே. ஆதலால் சிவஞான முனிவர் கூறிய பொருளே பொருத்தமானதாகத் தோன்றுகின்றது" என்றுங் கூறுவர் குறிப்பாசிரியரின் கூற்றினைத் தந்த கணேசையர், சூத்திரங்களிலுள்ள அச்சொற்கள் தொகைப்பொருளை உணர்த்துகின்றனவா அல்லவா என்பதை ஆராய்கிருர்.

சாஸ்திரியின் குறிப்புகளைப்பற்றிய மறுப்பு பொதுவகையாகவும் சூத்திரம் சூத்திரமாகவும் அமைந்துள்ளது. தொல்காப்பியர் பொருள்மயக்கத்தைத் தொகையிலும் தொடரிலும் உருபுமயக்கத்தைத் தொடரிலும் உணர்த்தியுள்ளார். இதுபற்றியே வேற்றுமை மயங்கியலிலே முதற் பதினேழு சூத்திரங்களும் தொகைவிரிமயக்கமாகவும் பத்தொன்பதாவதிலிருந்து பதினாறுச் சூத்திரங்கள் தொடர்மொழிமயக்கமாகவும் காணப்படுகின்றன. 'இதனதுஇதுவிற்றென்னுங்கிளவியும்' என்னுஞ் சூத்திரவுரையிற் சேனாவரையரும், 'ஓம்படைக்கிளவிக்கு' என்னுஞ் சூத்திரவுரையில் இளம்பூரணரும் சூத்திரப்பொருள்வைப்பு முறைபற்றிக் கூறிய கருத்துகளை நோக்கும்போது, தொகை, தொக, தொகா என்பன சமாசனையே உணர்த்தின என்பது தெளிவு என்பர் கணேசையர்.

சூத்திரரீதியான ஆராய்ச்சியிலே, முதலிலே வருவது, 'அதுவென் வேற்றுமை உயர்திணைத்தொகைவயின்' என்பது. உரையாசிரியர் மதப்படி, சம்பந்தப்படுதல் என்னும் பொருளில் வருவதாகக் குறிப்பாசிரியர் கூறியுள்ளார். ஆறும் வேற்றுமைக்குரிய முறைப்பொருள் என்று உரையாசிரியர் கூறியது கருத்துரையேயன்றிப் பதவுரையல்ல. குறிப்பாசிரியர் கூறியவாறு சம்பந்தப்படுதல் என்னும் பொருளிற் றொகையென்பது வந்ததாயின், அது விரியும்போது, உயர்திணையொடு தொகைவயின் என விரிந்துநிற்றல் வேண்டும். அவ்வாறு நில்லாமையில், அது பொருந்தாது. 'குத்தொக வரூஉங் கொடையெதிர்கிளவி' என்னுஞ் சூத்திரம் தொகைவிரியன்றென்பதை மாற்றுதற்காக, நாகரது பலிகொடுத்தான் என்றும் வரலாமென்பதை இச்சூத்திரம் விதிக்கின்றது என்று குறிப்பாசிரியர் கூறினார். இச்சூத்திரத்தின் முதலடிக்கு குவ்வுருபு தொகும்படி வருகின்ற கொடையெதிர் பொருண்மையை உணர்த்துந் தொகைச்சொல் என்றுபொருள் கொள்ளப்படும். கொடையெதிர்கிளவி என்றது கொடுத்தலென்னும் வருமொழியைக் குறித்ததன்று. கொடையெதிர்தல் என்பதிலே, எதிர்தல் நேர்தல் எனச் சேனாவரையர் பொருள் கூறுவர். நச்சினார்க்கினியர், உரையாசிரியர் முதலியோருக்கும் சேனாவரையரின் பொருள் உடன்பாடென்பது, அவரவர் உரையாற் புலனாகும். பிரயோக விவேகநூலாரும் இக்கருத்துக்கு ஆதரவாளரே. ஆதலின் இதனுள்ளும் தொக என்பது சமாசனைக் குறித்தே வந்துள்ளது. இனி 'உருபு தொக வருதலும்' என்பதில்வரும் 'தொக' என்பதும், 'மெய்யுருபு தொகா விறுதியான' என்பதில்வரும் 'தொகா' என்பதும் சமாசனையே உணர்த்தினவென்பது இரண்டாவது கட்டுரையாகிய 'தொகைநிலை' யிலே காட்டப்பட்டுள்ளது. உருபும் பொருளும் விரிவன ஒன்றுமின்றெனச் சாஸ்திரி கூறியதற்கு எதிரான உதாரணங்கள் சிலவற்றைக் காட்டுவதோடு, குறிப்பாசிரியர் கூறியது பொருந்தாதென ஐயர் கட்டுரையை நிறைவு செய்கின்றார்.

## 7. இருபெயரொட்டாகுபெயரும் அன்மொழித்தொகையும்

தமிழ் இலக்கணகாரருள் இன்னும் சர்ச்சைக்குரியதும் தீராததுமான பிரச்சினைகளுள் ஒன்று ஐயரால் ஆராய்ச்சிக்கு எடுக்கப்படுகிறது. 'கற்போர்க்கு உணர்ச்சி பெருகும்படி' எழுதப்பட்டதாகக் கணேசையர் கட்டுரையின் தொடக்கத்திலே கூறிவிடுகின்றார். இருபெயரொட்டாகு பெயரும்

அன்மொழித்தொகையும் ஒன்று, வேறு என்பதே பிரச்சினை. இளம்பூரணரும் சேனாவரையரும் மேலன இரண்டும் ஒன்றே என்ற கருத்தைத் தெரிவித்துள்ளனர். பொற்றொடி என்பது இருபெயரொட்டிப் பொற்றொடி தொட்டாளை விளக்குமென உரைத்தனர். பொற்றொடி வந்தாள் என இருபெயரொட்டு, அன்மொழிப்பொருள் மேலும் வந்ததெனக்கூறும் சேனாவரையர் பெயர் இயற்பெயர் ஆகுபெயர் என இரண்டாய் அடங்குதலில், இயற்பெயரைப் பெயரியலிற்கூறி, அன்மொழித்தொகை தொகையாதலினால் எச்சவியலுள்ளும் இடையியலுள்ளும் கூறப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதென்றுங்கூறினர்.

நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், சிவஞானமுனிவர் ஆகிய மூவரும் இருபெயரொட்டாகு பெயரும் அன்மொழித்தொகையும் வேறு என்று கருதினர். மக்கட்சுட்டென இரண்டுமில்லாததோர் பொருளையுணர்த்தாது, இரு பெயரொட்டு மக்களை உணர்த்திற்றெனக்கூறும் நச்சினார்க்கினியர் பொற்றொடி ஆகுபெயராகாது அன்மொழியாகும் என்றனர். இருபெயர் தொக்கு ஒரு சொன்னீர்மைப்பட்டு, மற்றொரு பொருள் தருபெயரே இருபெயரொட்டாகு பெயரெனக் கொள்ளும் தெய்வச்சிலையார் துடிபோன்ற இடையினையுடையாளைத் துடியிடை யென்பது ஆகுபெயரென்பர். அவர் அன்மொழித் தொகையை விளக்கும்போது, அல்லாதமொழி தொக்கு மூவகைத் தொகையிலும் முன்னும் பின்னும் என்னும் இரண்டிலும் உணரப்படும் பொருண்மையுடையதெனக் கூறினர். கடுங்கோல் என்னும்போது கடுமையுங்கோலும் அரசன்மேல் நிற்றலால், பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழிஎன்பர். சிவஞானமுனிவர் இரண்டும் ஒன்றென்பதிலே நச்சினார்க்கினியரையும் தெய்வச்சிலையாரையும் ஆதரித்து நிற்கும்போதிலும், இருபெயரொட்டாகுபெயரென்று தெய்வச்சிலையார் கூறுவதை அன்மொழித்தொகையென்றும் அன்மொழித்தொகையென்று தெய்வச்சிலையார் விளக்குவதை இருபெயரொட்டாகு பெயரென்றும் மாற்றிக் கூறியுள்ளார். ஏதாவது வேறுபாடு இரண்டுக்குமிடையே கண்டு பிடித்துக் கூற வேண்டுமென்ற நோக்கத்தை முன்வைத்து இவ்விருவரும் உரை கூறியிருக்க வேண்டுமென்றும், இருவரும் தாங்காட்டிய உதாரணங்களையும் நுனித்து நோக்காது, ஆகுபெயர் பொருளோடு இயைபுடையதாய் வருமென்றும் அன்மொழி இங்ஙனமின்றியும் வருமென்றும் கூறினரெனக் கணேசையர் கண்டிப்பர்.

கணேசையர் தெய்வச்சிலையாரின் உரையை முதலிலே ஆய்கிறார். தகரஞாழல் என்பதிலே தகரமும் ஞாழலுமாகிய இரண்டும் சாந்தின் மேல் நிற்றலால், அன்மொழித்தொகையென்ற தெய்வச்சிலையார் கருத்து, தகரமும்ஞாழலுங் கூடியதே சாந்தாதலாலே பொருந்தாதென்பர் ஐயர். கருங்குழல் முதலிய பண்புத்தொகையில் வரும் அன்மொழியிலே குழலுக்கும் பெண்ணுக்கும் இயைபு காணப்படுகிறது, இதனை அன்மொழித் தொகையாகக் கொள்ளாமல் விடுவதாயின், பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக்குத் தொல்காப்பியர் கூறிய இலக்கணம் தவறுகிறது. பொன்தொடியையே அன்றி, உடையாளையும் விசேடித்துச் செல்வமுடையாளென்பதைக் காட்டி நின்றதனால், பொற்றொடி அன்மொழித் தொகையென்று கொள்ளும் தெய்வச்சிலையார் துடியிடை, தாழ்குழல் முதலியவற்றை நிராகரிப்பது பொருத்தமில்லை. அதனாலே, தெய்வச்சிலையார் காட்டிய வேறுபாடு பொருந்தாதென்பர் ஐயர்.

இயைபு வேண்டாது பிறிது பொருளுணர்த்தி வருவது அன்மொழித் தொகையென்ற முனிவர் கூற்றின் மூலாதாரத்தைக் கணேசையர் அறிய முயல்கிறார். வடமொழியில் அன்மொழித் தொகைகள் சக்திய சம்பந்தம் பெறவேண்டுமென்று பிரயோகவிவேகம் முன்பே கூறியுள்ளதை ஐயர் காட்டுகிறார். நுணுகி நோக்குவார்க்குத் தொகையாற்றலாற் பெறப்படும் அன்மொழிப்பொருளும் சம்பந்தம் பெற்றுவருகிறதென்பது புலப்படும். பாணினி ஆகுபெயரைத் தற்குணசம்விஞ்ஞான வெகுவிரீகி, அதற்குணசம்விஞ்ஞான வெகுவிரீகி எனக்கூறுவரெனப் பிரயோகவிவேகங் கூறியுள்ளது. பாணினியின் சூத்திரஉரையை நோக்கும்போது, அன்மொழிப் பொருள் இயைபுடையதோர் மொழிபற்றியே பெறப்படுமெனத் தெரிய வருவதாகக்கூறும் ஐயர், ஆகுபெயர் விட்டஆகுபெயர், விடாதஆகுபெயரென இரண்டாயவாறுபோல, அன்மொழித் தொகையும் விட்ட அன்மொழித் தொகை (அதற்குண சம்விஞ்ஞான வெகுவிரீகி) விடாத அன்மொழித்தொகை (தற்குணசம்விஞ்ஞான வெகுவிரீகி) என இரு வகைப்படுமென்றும் இயைபு அங்கு உண்டு என்பது பெறப்படும் என்றுங் கூறுவர். முனிவர் தொழிற் சம்பந்தம் மட்டும் நோக்கிக் கூறினார் போலும்.

கணேசையர் சொல்லதிகாரக் குறிப்பாசிரியரை ஓரிடத்தில் மறுத்தும் ஓரிடத்தில் உடன்பட்டும் செல்வதை இக்கட்டுரையிலே காணலாம். தொல்காப்பியர் ஆகுபெயர்பற்றிக் கூறிய சூத்திரத்தை நோக்கும்போது, அவர் தொழிலியைபை நோக்காது, ஆகுபெயர்க்கும் பொருளுக்குமே சம்பந்தங் கூறியதாகத் தெரியவருவதாகக் கூறும் ஐயர் சேனாவரையர் கூறிய உரையை எடுத்துக்காட்டுவர். 'செந்தமிழ்' தொகுதி 26, பகுதி 9, பக்கம் 24இல் குறிப்பாசிரியர் சேனாவரையருரை பொருத்தமற்றதெனக் கூறியுள்ளதை ஐயர் நிராகரிக்கிறார். சேனாவரையரை முனிவர் கண்டித்தமைக்கு ஐயர் பதிலிறுக்கிறார். முனிவர் வடமொழியோடும் மாறுபடுதலாலும் எனக் கூறியதற்குக் காரணம் சக்திய சம்பந்தம் வேண்டாது தொகையாற்றலாற் பெறப்படுமென்பது நோக்கியே. அன்மொழிப்பொருளும் சம்பந்தமுடைய மொழிகளிடத்தேயே தோன்றும். வடமொழியோடும் மாறுபடாமற் கூறல், வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் ஒத்த வழிமட்டுமே பொருந்தும். வடமொழியில் வரும் அன்மொழித்தொகை தமிழில் வரும் அன்மொழித்தொகை போலன்றி, தாம் எந்தப் பொருள்மேல் வருகின்றதோ, அந்த அந்த லிங்க விகுதியைப் பெற்று வருதலினாலே, தமிழில்வரும் அன்மொழித்தொகையோடு வேறுபாடுடையதென உதாரணங்கள் தந்து ஐயர் விளக்குகிறார். இரண்டிடத்தும் வரும் அன்மொழித்தொகைகளும் சிறிது வேறுபாடுடையனவென்ற குறிப்பாசிரியர் கருத்தை ஐயர் உடன்படுகிறார்.

தொல்காப்பியர் இருபெயரெனக் கூறாது இருபெயரொட்டு எனக் கூறியதனால், கணேசையர் தொகையும் ஒட்டும் ஒன்றென்கிறார். அன்மொழித்தொகை பிரிந்துநின்று ஆகுபெயர்ப்பொருளை உணர்த்த முடியாது. ஐயரின் இக்கட்டுரை ஒன்றிலேயே பிரயோகவிவேகம் மறுக்கப்படுகிறது. வடமொழிநோக்கிப் பிரயோகவிவேக நூலார் தந்த அன்மொழி எடுத்துக்காட்டுகளெனப் பாயினமேகலை முதலியன ஐயரால் நிராகரிக்கப்படுகின்றன. ஐயருடைய கொள்கை, அண்மையில் வெளிவந்த கட்டுரையொன்றிலே நிராகரிக்கப்பட்டுச் சிவஞான முனிவர் கொள்கை போற்றப்

பட்டுள்ளமையை இவ்விடத்திலே எடுத்துக்காட்டலாம். இக்காலத் தொடரியல் இலக்கண முறையிலே, ஆகுபெயர் – அன்மொழித்தொகை என்பவற்றை ஆராய்ந்த கலாநிதி பொன். கோதண்டராமன் பொற்கொடிவந்தாள் அன்மொழித் தொகையெனவும் கொள்ளைக்கூட்டம் வந்தது இருபெயரொட்டாகு பெயரெனவும் 'இலக்கண உலகில் புதிய பார்வை' என்ற நூலிலே விளக்கியுள்ளார்.

## 8. சிறுபொழுதாராய்ச்சி

இக்கட்டுரை மட்டுமே பொருளிலக்கணம் சம்பந்தமானது. இக்கட்டுரை கண்டன கண்டன வகையைச் சேர்ந்தது. 'செந்தமிழ்' தொகுதி 26, பகுதி 2 இல், கணேசையர் சிறுபொழுது என்ற தலைப்பிலே ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதினர். சிறுபொழுதுகள் ஐந்தே என்ற சிவஞானமுனிவரின் கருத்தை மறுத்துச் சிறுபொழுதுகள் ஆறு என்ற பழைய உரையாசிரியர்களின் கருத்தை நிலைநாட்டுவதாக அக்கட்டுரை அமைந்தது. ஐயரின் கட்டுரைக்கு மறுப்பாக, 'செந்தமிழ்' தொகுதி 29, பகுதி 5இல், சி. வீரபாகுப்பிள்ளையவர்கள் 'சிறுபொழுதாராய்ச்சி' என்ற கட்டுரை வெளியிட்டார். மறுப்புக்கு மறுப்பாக, தம்முடைய முந்திய கொள்கையை நிறுவுவதற்காக, ஐயர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையும் வீரபாகுப்பிள்ளை பயன்படுத்திய அதே தலைப்பிலே வெளிவந்தது. ஐயரின் கட்டுரை பிள்ளையின் கருத்துக்களைச் சான்றுகள் காட்டி மறுக்கவேண்டியிருந்ததனால், மிகநீண்டு அச்சில் 32 பக்கங்களுக்குப் போய்விட்டது.

பிள்ளையின் ஆராய்ச்சி முனிவரின் கருத்தைத் தாபிக்க வந்ததனால் இக்கட்டுரை நேரல் வழியிலே முனிவரைக் கண்டிப்பதாகவும் அமைகிறது. கணேசையர் தம்முடைய கட்டுரை நீண்டுசெல்லாமலிருப்பதற்காக, பிள்ளையின் ஆராய்ச்சியுள் வேண்டியவற்றை மாத்திரம் மறுத்து உண்மையை நிலைநாட்டுவதாகக் கூறுகிறார். கணேசையர் மறுப்புக்குரியனவாகக் காட்டும் பகுதிகளும், அவையொவ்வொன்றையும் நிராகரிக்கும் அணுகுமுறையும் சுவை பயப்பனவாயுள்ளன. பிள்ளை, "இவ்விதம் ஸ்ரீ சுவாமிகள் இளம்பூரணரையும் நச்சினார்க்கினியரையும் மறுத்துச் சிறுபொழுது ஐந்து என்று கூறிவிடவே சிறுபொழுதாறென்பது பழங்கதையாய்விட்டது" என்கிறார்கள். முனிவரிலுள்ள உவப்போடு நோக்குவார்க்குச் சிறுபொழுதாறென்பது பழங்கதையாவதன்றி, ஏனைய அறிஞர்க்கு அது பழங்கதையாகுமா என்ற வினாவினைக் கணேசையர் எழுப்புகிறார்.

### வாதங்களும் பதில்களும்

1. நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் 'வைகுறுவிடியல்'. பழையபாடம் அதுவே என்கிறார் பிள்ளை. இளம்பூரணர் 'வைகறைவிடியல்' மட்டுமே காட்டுகிறார். அகப்பொருள் விளக்கப் பழைய உரையிலும் அதே பாடம். தாமோதரம்பிள்ளையும் பொருளதிகார முதற் பதிப்பிலே அதே பாடத்தைக் கொடுத்துள்ளார். பிள்ளை நச்சினார்க்கினியரின் பாடத்தைக் கொண்டால், அதை வினைத்தொகையாக்கி தம்முடைய கருத்துக்குத் தகத் திரிக்கலாமென நம்பியிருக்கிறார்.

2. இரவு நேரம் நான்கு யாமங்களைக் கொண்டதெனவும் இரண்டாவது யாமத்துக்கும் நான்காவது யாமத்துக்கும் இடைப்பட்ட நடுயாமமே

மதுரைக் காஞ்சியிலே பாடப்பட்டுள்ளதாக, நச்சினார்க்கினியர் கூறுவரெனவும் பிள்ளை கூறுவர். இரவை நான்கு கூறுகக் கொள்வது வடநூல் வழக்கு; மூன்று கூறுகக் கொள்வது தமிழ் வழக்கு; நான்கு கூறுகக் கொள்ளும் கூறைநூல் வழக்கு வடநூல் வழக்கே. 'மாலை, யாமம், வைகறை' என்று அகப்பொருள்விளக்கம் கூறுவதே தமிழ் வழக்கு. சங்ககால அகத்திணை நூல்களில், யாமம் ஒன்றே. தமிழ் வழக்குப்படி, பகல் மூன்று பிரிவு இரவு மூன்று பிரிவு. பட்டினப் பாலையில் வரும் கடைக்கங்குல் வருணனை பின்னிரவு வருணனை. சிலப் பதிகாரத்தில் அரையிருள் யாமம் இடையாமமாகும். மதுரைக் காஞ்சியிலே நச்சினார்க்கினியர் வலிந்தும் நலிந்தும் நான்கு யாமமாக்கினர்.

3. கோயிற் பூசாகாலங்கள் ஆறிலே, பகற் பன்னிரண்டு மணியோடு நான்கு காலங்கள் முடிவதாகவும் மாலை ஒன்று, இரவு ஒன்று இடம் பெறுவதாகவும் இவை சிறுபொழுதுகள் ஆறு சம பிரிவுகள் என்பதை எவ்வாறு வலியுறுத்துமெனப் பிள்ளை வினவுவர். இலங்கைக் கோவில் களிலே ஆறு சிறுபொழுதுகளுக்கும் ஆறு பூசா காலங்கள் உண்டு. பகலை ஐந்தாக வகுக்கும் வழக்குமுண்டு என்ற ஐயர் அது வடநூல் வழக்கு என்பர்.

4. மாலைப்பொழுது ஆறு மணிக்கும் பத்து மணிக்கும் இடைப்பட்ட நேரமென்ற ஐயர் கருத்தினை மறுக்கும் பிள்ளை சூரியாஸ்தமனத்திற்கும் இரவுக்கு மிடைப்பட்ட காலமே மாலையெனவும் செவ்வானமுடைமையும் சிறிதுநேரமாதலும் அதன் இயல்புகளெனவுங் கூறுவர். சூரியன் மறைவுக்கும் சூரியோதயத்துக்கும் இடைப்பட்ட காலம் இரவு. இரவின் முற்பகுதியே மாலை. வருணிக்குங்காற் பெரும்பாலும் சிறப்பு நோக்கி, அந்திமாலையை எடுத்து வருணிப்பது ஆசிரியர் வழக்கு. மாலை சிறுபோதென்றலும் இரவின் வேறு என்றலும் பொருந்தாது.

5. பிள்ளை, ''இருள்வரமாலை வாள்கொள'' என வருணிக்கப்பட்டதென்றும் ''மயங்கிருட லைவரவெல் லைக்கு வரம்பாய இடும்பை கூர்மருள்மாலை'' என்று மாலையின் பின்னந்தியே பகலுக்கு வரவு என்றும் கூறியுள்ளார். ஆசிரியர் பகற்கு வரம்பு மாலையென, இவர் பின்னந்தியென்கிறர். முன் சூரியாஸ்தமனத்தின் பின்மாலை என்பதை ஒப்புக்கொண்ட பிள்ளை முன்னுக்குப் பின் முரணுகிறர். மருள்மாலை – மயக்கத்தைத் தரும் மாலை. அந்தி மாலையிலேயே, இருள் வரத்தொடங்கிவிடும். ''இருடலை வர''ச் செவ்வானந் தோன்றும் அவ்வளவு, சிவனுக்கும் உமைக்கும் நடுவிருக்கும் குமரனுக்கும் உவமை கூறியது. அந்திமாலை இரவின் வேறன்று. மாலையிற்றேன்று மதியம் என்பதனல் மாலை சிறுபொழுதாகிவிடாது. பூரணை காலத்திலே சந்திரன் பின் மாலையிலேயே தோன்றுகிறது. நளவெண்பாவிலே, மாலை உண்டுபோட்டவுயிரை, நடுயாமத்திலே ஊதை உருவிப்புக்கதெனவரும் வருணனை ஐயரது கருத்துக்குச் சான்றாக்கப்படுகிறது. பிள்ளையின் கருத்துப்படி, 9 மணிவரை மாலை. ஒரு மணி கூட்டினல் பொருந்தாதென்பது நகைப்புக்கிடமானது.

6. வைகறையும் விடியலும் ஒன்றெனப் பிள்ளை பல உதாரணங்கள் காட்டுவர். வைகறைக்கு விடியல் என்று பெயருண்டு; ஆனல், இரண்டும் வேறு. குறிஞ்சிக்கலியுள் 'விடியல் வெங்கதிர் காயும்'. 'விடியற் பின்னர்த்தாகிய வெங்கதிர்' என முனிவர் புரட்டிப் பொருள் கூறுகிறர்.

"வெங்கதிர் தோன்றி விடிந்ததையன்றே" என்பதைப் பிள்ளை பெரும் புரட்டாகப் புரட்டி, 'இருள் தோன்றும்படி விடிந்தது' என்கிறார். பிள்ளை முரணுறுதல் நன்கு விளங்கிவிட்டது. தொன்னூல் விளக்கத்திலும் வீரமாமுனிவர் விடியலை, 'எற்றேற்றம்' என்பர். இராமவதாரத்து யுத்த காண்டத்திலே அநுமான் மேருவுக்கப்பாற் சென்றபோது சூரியனைக்கண்டு, 'உதயமாயிற்று; விடிந்தது' என மயங்கிப் பின் 'சூரியன் மேற்றிசையில் இருக்கின்றான்' ஆதலால் விடிந்ததுமன்று என்று கூறியதால் சூரியோதயமே விடியலாம். ஐயர் விடியல் சூரியோதயமெனக் கூறியது காக்கையை வெள்ளைபோலுமென்று பின்னைக்குத் தோன்றியது வியக்கத்தக்கது. வைகறையாமம்; ஆனால் விடியல்யாமமென்ற வழக்கு இல்லை.

7. விடியல் நாள்வெயிற் காலைக்குப் பெயராதலை நோக்கியே, இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் வைகறையும் விடியலும் எனப் பொருள் கூறினார்கள். நச்சினார்க்கினியர் வைகுறு என்ற சொல்வடிவத்தை செவியறிவுறூஉ என்பதனோடு ஒப்பிடுகிறார். ஊடல் வைகறையோடு மட்டுமல்ல, விடியலோடும் சம்பந்தப்பட்டது. மருதத்தின் புறமாகிய உழிஞைக்கும் விடியலே உரியது. முனிவர் கூறியதே புறப்பொருள். அதுவே பொருளாயின், தொல்காப்பியரின் புலமையை இழிவுபடுத்துகிறது. ஏனைய பொழுதுகளும் அடையின்றிக் கூறப்பட்டுள்ளன. சூத்திரமல்லாது, செய்யுளாயின், அடை வரலாம்.

8. அகப்பொருள் விளக்க நூலாரை இலக்கண விளக்க நூலார் மறுத்த மறுப்பை மனத்துள் வைத்துக்கொண்டு, சுவாமிகள் எழுதிய மறுப்பைப் பிள்ளை மெய்யென்று தாபிக்கப் புகுந்தது பெருந்துக்கமே என்பர் ஐயர். ஊடல் விடியற்காலத்தும் நிகழும் என்பதற்கு நச்சினார்க்கினியர் காட்டிய, 'காலை எழுந்து கடுந்தேர் பண்ணி' என்பதில் வரும் காலை என்பதுபற்றி, நச்சினார்க்கினியர் காலை வந்ததெனக் கூறினாரல்லர். ஐயர் அப்படிக் கூறாதபோதும், பிள்ளை வேண்டாத விரிவுரை நிகழ்த்தியுள்ளார். அப்பாட்டுள்வரும் 'எல்லினன் பெரிது' என்றமைகொண்டே நச்சினார்க்கினியர் அவ்வாறு கூறுவர். 'குறிப்பாற் சிறுமையுடையன் பெரிதும்' எனப் புதுப்பொருள் படைத்த பிள்ளை, ஐயர் புதுக்கருத்துத் தாபிக்க வந்துள்ளாரென்கிறார். வைகறை, விடியலும் ஊடல் தீராத வழி, பாணன் விறலிவாயில்களாக அனுப்புவதும், முடியாவிட்டால், விருந்தோடு புக்கு ஊடல் உணர்த்துவானெனப் பொருளிலக்கண நூலார் கூறலின், மருதத்துக்குக் காலை இல்லை என்று எவ்வாறு கூறலாம்?

9. நக்கீரர் வைகறையுள் விடியலை அடக்கியும் குறுந்தொகை நூலார் எற்பாட்டை மாலையுள்ளடக்கியும் கூறினரென ஐயர் எழுதியது தவறென்கிறார் பிள்ளை. சங்கப் புலவர் வழக்கு அதுவல்ல. முரஞ்சியூர் முடிநாகராயர் 'மண்டிணிந்த நிலமும்…நீரும்' எனப் பஞ்சபூதங்களை எண்ணலால், அது அறியப்படும் – பிள்ளை. இவ்வைந்தும் தனித்தனி பொருள்கள். காலம் ஒரு தனிப்பொருள். அதன் பகுப்புகளை, ஒன்றனுள்ஒன்று அடக்கலாம். நக்கீரனார் வைகறையாமம் சிறுபொழுதெனக் கூறிவிட்டு, விடியலுமடங்க, வைகறைவிடியலென உதாரணங்காட்டினாரென்றல் பொருந்தாது – பிள்ளை: அவருரைக்கண் அச்சூத்திரங்கள்

பிற்காலத்தாரால் சேர்க்கப்பட்டன. களவியலுரை நக்கீரருரையன்று எனச் சாமிநாதையர் சங்கத் தமிழும் பிற்காலத்தமிழும் என்ற நூலிலும் ஸ்ரீநிவாசப்பிள்ளை தமிழ்வரலாறு என்ற நூலிலும் கூறியுள்ளனர்.

10. சிலப்பதிகார உரையாசிரியர் நெய்தற்கு எற்பாடு கூறவுமில்லை; வையமோ கண் புதைப்ப வந்தாய் மருண்மாலை என்பதை உதாரணங் காட்டவுமில்லை. பிள்ளையின் இக்கூற்று ஐயர் எழுதியதை விளங்கிக் கொள்ளாமையே. அடியார்க்குநல்லார் பதிகவுரையில் எற்பாடும் அமையச் சிறுபொழுது ஆறு என்று கூறியமையால், ஐயர் அதை வருவித்துக்கொண்டார். பின் சிலப்பதிகாரத்துள் வந்த சிறுபொழுதுகளைக் கூறுமிடத்தே, அவர் மாலையைக் கூறியுள்ளார். பரிபாடலில் வந்த கிரகநிலை ஆவணி மாதத்துப் பூரணையிலன்று வந்த கிரகணை நேரங்கூறியதாதலால் சூரியன் நிற்க என்றதனால், இது எற்றேற்றம் என்றார். ஆவணியிலே, சூரியன் சிங்கராசியில் உதயமாவதால், இது பொருத்தமே.

11. 'ஏற்பாடு' என்பதற்கு முனிவர் கூறியவாறு, காலை என்பதே பொருத்தம் – பிள்ளை. அகப்பொருளிலக்கணம் சொன்ன ஆசிரியர்கள் நெய்தற்கு சிறுபொழுது கூறும்போது, எற்பாடு என்று கூறுகின்றனரே யன்றிக் காலையென ஒருவரும் குறிக்கவில்லை. அகப்பொருள் விளக்க நூலார் 'எற்படுகாலை' 'வெய்யோன்பாடு', என்ற தொடர்களை வழங்கியுள்ளார். காலை என்பதைக் காலைநேரம் என்று கொள்ளும் பிள்ளை எற்படு என்பதை அடைமொழியாகக் கொள்கிறார். காலை என்பதற்குக் காலம் என்று பொருள் – ஐயர். பழைய உரைகாரரும் 'ஆதித்தன் படுகிறபொழுது' என்றார். அகப்பொருள் விளக்கநூலார் 'வெய்யோன் றேற்ற' மெனக்கூறாமல், 'வெய்யோன்பாடு' என்றே கூறியிருத்தலால், பொழுதுபடுதலையே கூறினாரென்று துணியலாம். எற்பாடு என்பது சூரியோதயத்துக்குச் செய்யுளில் அரிய வழக்கு. சங்க இலக்கியங்களிலே நெய்தற்கும் முல்லைக்கும் மாலை கூறுங்கால், அதற்குமுன் பொழுது படுதலை எற்பாடு என்ற சொல்லாலே கூறக்காணலாம். எற்பாடு காலையை அன்றி மாலையை உணர்த்துமா என்று பிள்ளை வினவல் எவ்வாறு பொருந்தும்? எற்பாடே அன்றி மாலை முதலியனவும் நெய்தற்கு வருவது மயக்கமாகும். நடுப்பகலில் வரும் பிரிவின் பின்னர், அதனால் நிகழும் இரங்கல் வருதலே முறை. காமந்தணிவது காலை; காமமிக்கு இரக்கும் காலமே எற்பாடு.

12. ஐயரின்படி, பிற்பகல் இரண்டுமணிமுதல் ஆறுமணிவரை எற்பாடு. பிற்பகலை எற்பாடு என்று வருணித்த ஆசிரியர்கள் முன்னுமில்லை; பின்னுமில்லை. அகநானூற்றுச் செய்யுளில், 'உப்பின் குப்பையேறி எற்பட வருதிமிலெண்ணும்' என மாலையில் வந்த திமிலையே எற்பட வருதிமில் என்கிறது. எற்பாடும் மாலையும் ஒருபொருட் சொற்களே. இதனை, 'மாலை வந்தன்று' என்ற ஐங்குறுநூற்றுச் செய்யுட்பகுதிக்கு அதனுரையாசிரியர் எற்பாடு என்று பொருள் கூறுவதால் அறியலாம்— — இதுவரை பிள்ளையின் கருத்துகள். காலத்தை ஆறுசமகாலப் பிரிவுகளாக வகுத்தாலும், அவ்வக்காலப்பிரிவுக்குச் சிறந்த காலப்பகுதியையே புலவர்கள் எடுத்துப் பெரும்பாலும் வருணிப்பது வழக்கம். உதாரணமாக, வைகறைக்குக் கோழி கூவும் நேரம்; விடியலுக்குச்

சூரியோதயம்; நடுப்பகலுக்கு உச்சிக்காலம்; எற்பாட்டுக்குப் பொழுது படும் நேரம்; மாலைக்கு அந்திமாலை; யாமத்துக்குப் பானாள். அது பற்றியே, புலவர்கள் சூரியாஸ்தமனம் வருணித்துப் பின் அந்தி மாலையை வருணிப்பது. மாலை சூரிய அஸ்தமனத்துக்கும் இரவுக்கு மிடைப்பட்ட பொழுதே என்ற பிள்ளை, எற்பாடு மாலையுடன் ஒன்றெனல் பொருந்துமா? 'ஏற்படவருதிமில்' என்பதற்கு 'பொழுது படவருந்திமில்' என்பதே பொருள். 2 மணிதொடங்கி 6 மணிவரை எற்பாடு கூறி வருணித்த புலவர் இல்லையென்பர் பிள்ளை. அக்காலத்துத் தலைவி இரங்கல் கூறுவதன்றி, மணித்தியாலங் கூறி வருணிப்பதில்லை. திருக்கோவை, நாலடியார், உதயணன் கதை என்பனவற்றில் எற்பாட்டு வருணனையும் இரங்கலும் உள. சங்ககாலத் தொகை நூல்களுள் இந்த மரபு காணப்படுவதை நன்குணர்ந்த இளம்பூரணர் மாலை வருவதற்கு ஏதுவாகிய எற்பாடு கண்டு காட்டினர். அதனாலும் எற்பாடு பொழுது படுநேரம் என்பது தெளிவு.

13. அகத்திணைக்குரிய காலைவரப் பாடினமையோடு நண்பகலும் மாலையும் நடுயாமமும் வரப் பாடியிருக்கிறார்கள். அப்படியிருக்கவும் 'நெய்தற்றிணை பாடினாரெல்லாம் ஞாயிறு படுங்காலமாகவே வைத்துப்பாடியிருத்தலி னாலும்' என ஐயர் கூறியது முழுப்பூசனிக்காயைச் சோற்றுட் புதைத்தது — இதுவரை பிள்ளை கூறியது. 'நெய்தற்றிணை பாடினாரெல்லாம்' என்றது பெரும்பாலும் எற்பாடே பாடினமையாலாகும். தொல் காப்பியர் காலத்தின்பின், மாலையும் இரங்கல்பற்றியும் இயைபுபற்றியும் நெய்தற்குரியதாகக் கொள்ளப்பட்டதென்று கருதுவாருமுளர். அது பற்றியே ஐயரும் இரங்கல் பற்றி, 'எற்பாட்டை மாலையுளடக்கினர்' என்றார். பிற்பொழுது பாட்டிபழங்கதை படித்தலினாலும் விளையாட் டினாலும் கழியுமென்பர் பிள்ளை. தலைவனைப் பிரிந்து தனித் திருப்போருக்கு, விளையாட்டில் மனஞ்செல்லாது. பிள்ளை நெய்தற்குக் காலை வந்ததாகக் காட்டிய செய்யுட்கள் பலவும், நிலத்துக்கடையாயும் திணை மயக்கமாகவுமே வந்தன; இரங்கலோடு சம்பந்தப்பட்டு வரவில்லை.

14. 'நெடுங்கயிறு வலந்த... ... கோடுயர் திணிமணற்றுஞ்சுந்துறைவ' என்னுஞ் செய்யுள், காலையிற் சென்று மீன் பிடித்ததைக் குறித்தது — பிள்ளை. இதில் இளையரும் முதியருங் கூடியென்றதனால், இது கரை வலைபோட்டு இழுக்குந் தொழிலைக் குறித்ததேயாம். கரைவலை கடற் பதம் நோக்கிக் காலையிற் போடுவதுண்டு; 2 மணிக்குமேற் போடுவது முண்டு. 'மணற்றுஞ்சுந்துறைவ' என்றதனாலே இது எற்பாட்டிலே போடப்பட்டதாம். இளம்பூரணர் புறத்திணையிலும் தும்பைத்திணை நெய்தற்கு உரித்தாமாறு கூறும்போது, நெய்தற்கு ஒதிய ஏற்பாடு போர்த்தொழிற்கு முடிவாதலாலும் என்று கூறுவதாலும் மீன் வேட்டையால் வருதலாலும் எற்பாடு நெய்தற்குரித்தாவதாக ஐயர் முடிவுகட்டுகிறார்.

கணேசையரின் தொல் இலக்கியப் புலமைக்கும் தர்க்கவன்மைக்கும் சான்றாக விளங்குகிறது இக்கட்டுரை. தொல்காப்பியம் அகத்திணையியலுக்கு உரை வகுத்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பேராசிரியர் சோமசுந்தர பாரதியார் சிறுபொழுதுகள் ஆறே என்ற கருத்தை ஏற்றுள்ளார். சிறுபொழுதுகள் ஐந்தே என்று வாதிப்பதற்கு, இனி இடமில்லை.

## சில முடிபுகள்

### கணேசையரும் பிற இலக்கணகாரரும்

எட்டுக் கட்டுரைகளிலும், கணேசையர் பயன்படுத்திய முக்கியமான இலக்கண நூல்களும் பயன்படுத்தாத முக்கியமான இலக்கண நூல்களும் வருமாறு:

| பயன்படுத்தியவை | பயன்படுத்தாதவை |
|---|---|
| தொல்காப்பியம்-இளம்பூரணம் (10/11 நூற்.) | வீரசோழியம் (11 நூற்.) |
| -சேனாவரையம் (13 நூற்.) | நேமிநாதம் (13 நூற்.) |
| -நச்சினார்க்கினியம் (14 நூற்./பின்பு) | இலக்கணக்கொத்து (17 நூற்.) |
| -தெய்வச்சிலையார் (17 நூற்.) | முத்துவீரியம் (19 நூற்.) |

நன்னூல் (13 நூற்.)
-மயிலைநாதருரை (14 நூற்.)
விருத்தியுரை:
சங்கரநமச்சிவாயர் (17–18 நூற்.)
சிவஞான முனிவர் (18 நூற்.)
தொல்காப்பிய முதற்சூத்திரவிருத்தி (18 நூற்.)
இலக்கணவிளக்கச் சூறாவளி (18 நூற்.)
இலக்கணவிளக்கம் (17 நூற்.)
பிரயோகவிவேகம் (17 நூற்.)
தொன்னூல்விளக்கம் (18 நூற்.)
அகப்பொருள்விளக்கம் (13 நூற்.)
அகத்தியம் (6 நூற். ?)
திருக்குறள் – பரிமேலழகருரை
சிலப்பதிகாரம் – அடியார்க்குநல்லாருரை

கணேசையர் கட்டுரை ஒவ்வொன்றிலும் உடன்பாடும் எதிர்ப்பும் பெறும் முக்கியமான இலக்கணகாரரை இனி நோக்கலாம்.

போலியெழுத்து: நன்னூலார் கருத்து நிறுவல்; பெயர் குறிப்பிடாமல், சங்கரநமச்சிவாயரும் சிவஞான முனிவரும் கண்டிப்பு; கணேசையர் சார்பாகத் தொல்காப்பியர், இளம்பூரணர் நச்சினார்க்கினியர், பிரயோகவிவேகநூலார் காட்டப்பட்டுள்ளனர்.

ஆறனுருபு பிறிதேற்றல்: மயிலைநாதர் கருத்து நிறுவல்; சேனாவரையர், இளம்பூரணர் அதே கருத்தினர்; பிரயோக விவேகம் ஆதரவு; சிவஞான முனிவர் உரை மறுக்கப் படுகிறது.

தொகைநிலை: சேனாவரையர் கருத்து நிறுவல்; பிரயோகவிவேகம் ஆதரவு; இளம்பூரணர் கருத்து மறுப்பு; நச்சினார்க்கினியர், சிவஞான முனிவர் ஓரளவு உடன்பாடும் ஓரளவு எதிர்ப்பும்.

அளபெடை: நன்னூலார் கருத்து நிறுவல்; இளம்பூரணர், நச்சினார்க்கினியர் கண்டனம்; சிவஞான முனிவர் கருத்து ஏற்றல்; சேனாவரையர், நச்சினார்க்கினியர், சங்கரநமச்சிவாயர் கருத்துக்களோடு உடன்பாடு.

பிறிதுபிறிதேற்றல்: சுப்பிரமணிய சாஸ்திரி கண்டனம்; சிவஞான முனிவரைப் பின்பற்றுபவரெனக் கண்டனம்; மயிலைநாதர் கருத்தே இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் கருத்துமென ஆதரவு.

தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி: சேனாவரையர் கருத்து நிறுவல்; இளம்பூரணர், நச்சினார்க்கினியரும் அதே கருத்தினர்; சிவஞான முனிவர், சுப்பிரமணிய சாஸ்திரி கண்டனம்.

இருபெயரொட்டாகுபெயரும் அன்மொழித்தொகையும்: இளம்பூரணர், சேனாவரையர் கருத்து நிறுவல்; நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், சிவஞான முனிவர் கண்டனம். பிரயோகவிவேகத்தின் கருத்து நிராகரிப்பு; சுப்பிரமணிய சாஸ்திரி உடன்பாடும் மறுப்பும்.

சிறுபொழுதாராய்ச்சி: இளம்பூரணர், நச்சினார்க்கினியர் கருத்துநிறுவல்; அகப்பொருள் விளக்கம், தொன்னூல் விளக்கம் என்பனவும் அதே கருத்தின; வீரபாகுப்பிள்ளையும் சிவஞான முனிவரும் கண்டனம்.

கணேசையருடைய ஆய்வு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், சிவஞான முனிவர் என்போரின் இலக்கணக் கொள்கைகளைப் பற்றிய ஆய்வு என்று பொதுநோக்கிலே கூறலாம். மற்றவர்களின் கொள்கைகளிலே எது பொருத்தமானது என்று நிறுவுகிறாரே தவிர, புத்தம்புதிய கொள்கையாக, கணேசையர் எதையும் முன்வைக்கவில்லை. தொகைநிலை, அளபெடை என்ற இரண்டு கட்டுரைகளிலும் தவிர, ஏனைய ஆறு கட்டுரைகளிலும், ஐயர் இளம்பூரணரோடு உடன்படுகிறார். சேனாவரையருரை சொல்லதிகாரத்துக்கு மட்டுமே காணப்படுவதால், போலியெழுத்து, சிறுபொழுது என்பன சம்பந்தமாக, அவர் கருத்துகள் தெரிய வரவில்லை. ஏனைய ஆறு கட்டுரைகளிலும், ஐயருக்குச் சேனாவரையரோடு பூரண கருத்து உடன்பாடு காணப்படுகிறது. போலியெழுத்து, பிறிதுபிறிதேற்றல், தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி, சிறுபொழுதாராய்ச்சி என்னும் கட்டுரைகளிலே நச்சினார்க்கினியரோடு உடன்படும் கணேசையர் தொகைநிலை, அளபெடை, இருபெயரொட்டாகுபெயரும் அன்மொழித்தொகையும் என்னும் கட்டுரைகளிலே அவரைக் கண்

டித்துள்ளார். ஆறனுருபு பிறிதேற்றல் என்ற கட்டுரையிலே நச்சினார்க்கினியரோடு ஓரளவு உடன்படுகிறார். அளபெடை தவிர்ந்த ஏனைய ஏழு கட்டுரைகளிலும், சிவஞான முனிவர் கண்டனத்துக்குள்ளாகிறார். சுப்பிரமணிய சாஸ்திரியும், வீரபாகுப்பிள்ளையும் சிவஞான முனிவரின் ஆதரவாளர்கள். சாஸ்திரி சம்பந்தப்பட்ட மூன்று கட்டுரைகளிலே, இரண்டில் முழுவதாகக் கண்டிக்கப்படுகிறார்; ஒன்றிலே ஒரு கருத்து உடன்பட்டு, ஒரு கருத்து மறுக்கப்படுகிறது.

கணேசையர் சிவஞான முனிவரை இப்படிப் பல இடங்களிலே மறுத்தலால், சிவஞான முனிவர் தமிழ் இலக்கணக்கொள்கை வளர்ச்சியிலே குறிப்பிட்டுக் கூறக்கூடிய சில பங்களிப்புகளைச் செய்துள்ளாரென்பதை மறந்துவிடலாகாது. வடநூலறிவிலே தாம் பெற்றிருந்த பாண்டித்தியம் பற்றிய பெருமிதம் முனிவர், இலக்கணக்கொத்தாசிரியர்போல, தமிழ் இலக்கணம் வடமொழி இலக்கணத்தின் வழிவந்ததென்று கூறுமளவுக்கு மயக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஐந்திரமென்பது வடநூலாதலின், அதன் வழிவந்ததென்று தொல்காப்பியத்தைக் கொள்வது தவறு என்று முனிவர் வாதிக்கும்போது, தமிழ் இலக்கணக்கூறுகள் சிலவற்றின் தனித்துவம் அவரால் நன்கு உணரப்பட்டமை தெளிவாகிறது. தொல்காப்பியம் படித்தான் என்றவிடத்து முதற்சொல் ஆகுபெயரன்று திருவள்ளுவர் படித்தான் என்றவிடத்தே முதற்சொல் ஆகுபெயர். ஆகுபெயர்கள் சொல்மாற்றஞ் சிறிதுமின்றி நின்றவாறே பொருள்தருவது. இந்தக் கருத்தைத் தெளிவாக முனிவரே முதன்முதலில் விளக்கினார். நூன்மரபு என்பதற்கு, எழுத்திலக்கணத்தை ஒருவாற்றாற் றொகுத்து உணர்த்துவதென்று பிற உரையாசிரியர்கள் பொருள்கொண்டனர். எழுத்துகளுக்கு இலக்கண நூலுள் மரபாக இடப்பட்ட பெயர்களாகிய குறில், நெடில், உயிர், மெய் முதலியவற்றையே நூன்மரபு உணர்த்துவதால், நூன்மரபென்பது நூலினது மரபு பற்றிய பெயர் கூறுதலாமென்ற முனிவர் உரையே பொருத்தமானது. தொல்காப்பிய முதற்சூத்திரம், அகரமுதல் னகரமுடிவாயுள்ள முப்பதிற்கும் உள்ள பொதுப்பெயர் எழுத்தென்றும், இயங்காது சார்ந்து நிற்பன எழுத்தென்று சிறப்பிக்கப்படாவென்றும் குறிப்பால் உணர்த்தினமையால் அது அகரமுதலியவற்றிற்குப் பொதுப்பெயர் கூறுதல் நுதலிற்று என்ற முனிவரின் கருத்து, பிறஉரையாசிரியர்கள் அச்சூத்திரத்துக்குக் கூறிய உரையினும் சிறப்பானது. அகரமுதல் னகர இறுவாயாக எழுத்துகள் முறைப்படுத்தப்பட்டமைக்கு நுட்பமான ஏதுக்களை முனிவர் காட்டியதுபோல, வேறெவரும் காட்டவில்லை.

சிவஞான முனிவரை அரசஞ்சண்முகனாரோடு ஒப்பிட்டு முனிவரின் பெருமைகள் சிலவற்றைச் சுப்பிரமணியபிள்ளை எடுத்துக்காட்டியுள்ளார். இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலே, தொல்காப்பியப் பாயிரங்களுக்குமட்டும் விருத்தியுரை எழுதிச் சண்முகவிருத்தியென்ற பெயரிலே அரசஞ்சண்முகனார் வெளியிட்டார். 'முந்துநூல்' என்பது அகத்தியமே என்பது முனிவர் கருத்து. அரசஞ்சமுகனார் இறைவன் திருவாயினின்று தமிழிற்கு முதனூலாக முப்பத்துமூன்று சொற்கள் தோன்றினவெனவும், அவை நான்கு சூத்திரமாகப் பகுக்கப்பட்டனவெனவும், அவை நுட்பமாக முத்தமிழ் இலக்கணமும் முப்பொருளும் தெரிக்கும் இயல்பினவாகலின்,

## உசாவியவற்றுள்ளே தெரிந்தெடுக்கப்பட்டவை


1. அரசஞ்சண்முகனுர், சோழவந்தான் (1905) தொல்காப்பியச் சண்முக விருத்தியின் முற்பகுதியாகிய பாயிரவிருத்தி, தஞ்சாவூர்.

2. அறவாணன், க. ப. (1974) சைனரின் தமிழிலக்கண நன்கொடை, சென்னை.

3. கணேசையர், சி.(குறிப்பாசிரியர்) (1952) தொல்காப்பியம் எழுத்ததிகார மூலமும் நச்சினுர்க்கினியருரையும், கணேசையர்பதிப்பு, 2ஆம் பதிப்பு, சுன்ணுகம்.

   – (1938) தொல்காப்பியம் சொல்லதிகாரமூலமும் சேனுவரையருரையும், சுன்ணுகம்.

   – (1948) தொல்காப்பியம் பொருளதிகாரம் (முற்பாகம்) நச்சினுர்க்கினியம், சுன்ணுகம்.

4. கோதண்டராமன், டாக்டர் பொன். (1978) இலக்கண உலகில் புதிய பார்வை, சென்னை.

5. சங்கரநமச்சிவாயப் புலவர்; சிவஞான முனிவர் (1964) நன்னூல் விருத்தியுரை, கழக வெளியீடு, சென்னை.

6. சுப்பிரமணிய சாஸ்திரி, டாக்டர் பி. எஸ். (1930) தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு, திருச்சி.

7. சுப்பிரமணியபிள்ளை, கா. (1955) சிவஞான முனிவர் வரலாறும் நூலாராய்ச்சியும், சென்னை.

8. சுப்பிரமணியன், டாக்டர், ச. வே. (1971) இலக்கணத்தொகை – சொல், திருவனந்தபுரம்.

9. செந்தமிழ் :– தொகுதி 22, பகுதி 3; தொகுதி 25, பகுதி 9; தொகுதி 26, பகுதி 1; தொகுதி 26, பகுதி 7; தொகுதி 27, பகுதி 1; தொகுதி 27, பகுதிகள் 7, 9; தொகுதி 28, பகுதி 12; தொகுதி 29, பகுதி 10.

10. செல்வநாயகம், வி. (1957) தமிழ் உரைநடை வரலாறு, பேராதனை;

11. நவரத்தினம், க. (பதிப்பாசிரியர்) (1960) கணேசையர் நினைவு மலர், யாழ்ப்பாணம்.

12. பாலசுந்தரம்பிள்ளை, தி. சு. (குறிப்பாசிரியர்) தொல்காப்பியம்மூலம், கழக வெளியீடு, சென்னை.

13. பாலசுப்பிரமணியன், டாக்டர் சி. (1976) தமிழ் இலக்கிய வரலாறு, 12ஆம் பதிப்பு, சென்னை.

14. பொன்னம்பலபிள்ளை (பதிப்பு) (ஆறுமுகநாவலர் பரிசோதித்தது) (1912) இலக்கணக்கொத்து மூலமும் உரையும், தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கணவிளக்கச் சூறாவளி, 3ஆம் பதிப்பு, சென்னை.

15. வரதராசன், டாக்டர் மு. (1980) தமிழ் இலக்கிய வரலாறு, 4ஆம் பதிப்பு, புதுதில்லி.

16. வேலுப்பிள்ளை, டாக்டர், ஆ. (1966) தமிழ் வரலாற்றிலக்கணம், சென்னை.

17. Meenakshisundaran, T. P. (1974) Foreign Models in Tamil Grammar, D. L. A., Trivandrum.

18. Vijayavenugopal, G. (1968) A modern evaluation of Nannul (eluttatikaram) Annamalainagar.

19. Veluppillai, A. (1966) Adjectives in Tamil. Proceedings of the First I. A. T. R. Conference - Seminar, Kuala Lumpur.

★※★

அச்சூத்திரங்கட்கு இசை நுணுக்கமெனப் பெயர் வழங்கியதென்றுங் கூறுவர். அரசஞ்சண்முகனாரின் இத்தகைய கருத்துகள் கணேசையரின் ஏளனத்துக்குரியவாயின. அரசஞ்சண்முகனாரைக் கேலிசெய்து, கணேசையர் எழுதிய கட்டுரைகள், தொல்காப்பியப் பதிப்புகளிலே சேர்த்துக் கொள்ளப்படாததற்குச் சண்முகனாரின் தகுதியிலே ஐயருக்கு நம்பிக்கையின்மையே காரணமெனலாம். சிவஞான முனிவர் தகுதியுடையவராதலினாலே, அவர் கொள்கைகளை விமர்சனஞ் செய்த ஐயர் கட்டுரைகள், தொல்காப்பியப் பதிப்புகளிற் சேர்த்துக்கொள்ளப்பட்டன. சண்முகவிருத்தியைக் கண்டதனால் ஏற்பட்ட ஏமாற்றமே, அந்நூலுக்கு வழிகாட்டியாக இருந்த தொல்காப்பியச் சூத்திரவிருத்தியையும் முனிவருடைய பிற இலக்கண ஆக்கங்களையும் விமர்சனக் கண்கொண்டு பார்க்க, ஐயரைத் தூண்டியிருக்கலாம்.

## கணேசையர் வாதங்களில் வடமொழி இலக்கணமரபு பெறும் இடம்

தற்காலத்திலே மொழியின் அமைப்பு மொழியியற் பின்னணியிலே வைத்து நோக்கப்படுவதுபோல, தமிழ் இலக்கணக் கொள்கைகளை வடமொழி இலக்கணப் பின்னணியிலே வைத்து நோக்கும் போக்கு அண்மைக்காலம் வரையிலே வேரூன்றிக் காணப்பட்டது. தொல்காப்பியர் வடமொழி இலக்கணத்துக்கு எந்த அளவுக்குக் கடமைப்பட்டுள்ளாரென்பது பற்றிப் பலத்த கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. சோழப் பெருமன்னர் காலத்திலிருந்து தமிழ் இலக்கணகாரர் வெவ்வேறு அளவிலே வடமொழி இலக்கணத்தைத் தழுவியுள்ளனரென்பது தெளிவாகத் தெரிய வருகிறது. தொல்காப்பியம் சொல்லதிகாரத்துக்கு இரண்டாவது உரையாளராகிய சேனாவரையர் வடமொழி இலக்கணக்கருத்துகளை நன்கு பயன்படுத்தியுள்ளாரென்பது யாவரும் ஒப்பமுடிந்தது. வடஇந்தியாவில், முஸ்லிம்கள் ஆட்சி ஏற்பட்டதனால், அங்கிருந்த வடமொழி அறிஞர் பலர் வடமொழி நூல்களோடு தென்னிந்தியாவுக்கு ஓடிவந்தனர். தமிழ்நாட்டிலே ஆதீனங்கள் சமயப்பணி செய்ய முற்பட்டபோது, ஆங்கிருந்த துறவிகள் வடமொழியை ஆழமாகவும் அகலமாகவுங் கற்று, தம்முடைய அறிவுப் பெருமையைக் காட்டுவதற்காக, வடமொழியிலிருந்து தாம் பெற்ற ஞானத்தைப் பறைசாற்றினர். சிவஞான முனிவரும் இந்தப் போக்குக்கு விதிவிலக்கல்லர்.

தமிழ்நாட்டிலே காணப்பட்ட மேற்படிபோக்கு வடமொழி வெறுப்புக்கு வழிகோலியது. ஈழத்திலே வடமொழியின் ஆதிக்கம் இடம்பெறாததால், குறிப்பிடத்தக்க வடமொழி வெறுப்பு இல்லை. கணேசையர் வடமொழி இலக்கணக் கொள்கைகளை ஆராய்ந்தே தம்முடைய எட்டுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சிவஞானமுனிவரிலிருந்து கணேசையருக்குள்ள வேறுபாடு வடமொழி இலக்கணக் கொள்கைகள் தமிழ் இலக்கணமரபுக்கு ஏற்குமா என்பதை ஐயர் நுணுக்கமாக ஆராய்ந்துள்ளார், வடமொழியிற் கூறப்பட்ட சந்தியக்கரம் தொல்காப்பியரோ, நன்னூலாரோ கூறவில்லை என்று ஐயர் வாதிப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. தமிழிலுள்ள ஆறும் வேற்றுமையும் வடமொழியிலுள்ள ஆறும் வேற்றுமையும் ஓரளவு வேறுபாடுடையனவெனவும் தமிழிலுள்ள தொகைநிலையும் வடமொழியிலுள்ள தொகைநிலையும் ஓரளவு வேறெனவும் தமிழிலுள்ள ஆகுபெயரன்மொழித்

தொகைகளும் சிறிது வேறுபாடுடையன வெனவும் கணேசையர் நன்கு எடுத்துக்காட்டியுள்ளார். சிறுபொழுதுகள் ஆறு என்பதே தமிழ்வழக்கெனவும் வேறு பல பகுப்புகள் வடமொழிவழக்கெனவுங் கூறிக் கணேசையர் தமிழ்மரபை நிறுவுகிறார்.

சிவஞானமுனிவர் இலக்கணவிளக்கச் சூறாவளி எழுதியதுபோல, கண்டனத்துக்காகக் கண்டனம் செய்வது, கணேசையர் மரபல்ல. அளபெடை பற்றிய கட்டுரையிலே, பாணினியுடனும் முனிவருடனும் ஐயர் உடன்படுகிறார். தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி என்ற கட்டுரையிலே வடமொழிச் சமாசனுக்குத் தமிழ்மொழித்தொகை இணையானதென்று காட்டியுள்ளார்.

## கணேசையர் — ஈழத்துக்கல்விப் பாரம்பரியத்தின் விளைபொருள்

கணேசையரின் இலக்கணக் கொள்கைகளை விளங்கிக்கொள்வதற்கு, ஈழத்துக் கல்விப்பாரம்பரியம் பற்றிய உணர்வு உதவும் போலத் தோன்றுகிறது. கி. பி. பதினான்காம் நூற்றாண்டிலிருந்து ஈழத்திலே தமிழ்நூல்கள் தொடர்ச்சியாகத் தோன்றுகின்றன. தமிழ்நாட்டோடு ஈழத்துக்கு நெருங்கிய தொடர்பு நிலைபெற்று வந்தாலும், தமிழ்நாட்டிலேற்பட்டுவந்த மாற்றங்கள், ஈழநாட்டை நேரடியாகப் பாதிக்கவில்லை. பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின்பு ஐரோப்பியர் காலம் வரையிலே, ஒருவகையிலே தமிழ்நாட்டுவரலாறு ஒரு வீழ்ச்சிக்காலம். தமிழ்மொழி பெருமைகொள்ளத் தக்க நூல்கள் பல, அக்காலத்திலே தோன்றின என்று கூறமுடியாது. கணேசையரின் இலக்கணக் கொள்கைகளைப் பார்க்கும்போது, அவையாவும் பதினான்காம் நூற்றாண்டு அல்லது அதற்குமுன்பே தோன்றிவிட்டன என்பதைக் கவனிக்கவேண்டும். பிரயோகவிவேகம், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம் என்பன கூறும் கருத்துகளைத் தாம் உடன்படுவதாக, அவர் எடுத்துக்காட்டியுள்ளபோதும், அக்கருத்துகள் யாவும் பதினான்காம் நூற்றாண்டுக்கு முன்பு தமிழ் இலக்கணகாரர்களால் வெளியிடப்பட்ட கருத்துகளே என்பது அவதானிக்கத்தக்கது. வடமொழி இலக்கணமரபை அளவுக்கு மீறிப் பின்பற்றுவது தமிழ்மொழி இலக்கண மரபை மழுங்கடித்துவிடுகிறதென்பதே கணேசையர் கருத்தெனலாம்.

☆☆☆